
# பாரத மணி

[illegible]

MARCH
1944





ஸன்லைட் சோப் காய்ச்சும் ஒருவன் சொல்லுகிறான் . . .

“ஸன்லைட் சோப்பின் நுரையானது ஆடைகளிலிருந்து அழுக்கை உங்களுக்குச் சிரமமில்லாமல் போக்கிவிடுகிறது. அழுக்கு வஸ்திரங்களிலிருந்து தானாகவே அழுக்கைப் போக்கும் சக்தி வாய்ந்திருப்பதால் அதைச் சுயமாக வெளுக்கும் நுரை என்று சோப் தயாரிக்கும் ரசாயன சாஸ்திரிகள் கூறுகிறார்கள். சுய சக்தி வாய்ந்த சோப்பானது அழுக்கைத் தொட்டவுடன் அதைப் பிடித்துக்கொள்ளுகிறது. நுரை ஆடை முழுதும் பரவி இருக்கிறதா என்றுப் பார்த்துக் கொண்டால் போதும். பிறகு தண்ணீரில் அலசினவுடன் அழுக்கு போய்விடுகிறது.”

# ஸன்லைட் சோப்

## சுயமாக வெளுக்கும் நுரை உடையது




இப்பொழுது மெழுகுத் தாளினால் சுற்றப்பட்டு விற்கப்படுகிறது

S. 65-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு





மாத வெளியீடு

*ஆசிரியர் :*
கா. சி. வேங்கடரமணி

*காரியாலயம் :*
34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ரூபா 3

தனிப்பிரதி அணா 4

| மாலை 11 | **MARCH 1944** : சுபானு௵ பங்குனி௴ | முத்து 3 |
|---|---|---|


## பொருளடக்கம்


| *விஷயம்* | | *பக்கம்* |
|---|---|---|
| 1. சதி கஸ்தூர்பா | ... *நா ர.* | ... 73 |
| 2. கஜேந்திர மோட்சம் | ... பி. ஸ்ரீ. | ... 74 |
| 3. ஸம்ஸ்கிருத கீர்த்தனை | ... ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல். | ... 76 |
| 4. பிர்லா குடும்பம் | ... | ... 78 |
| 5. பிரம்ம ஞானம் | ... டி. எஸ். ராமானுஜம், எம். ஏ., எல். எல். பி. (லண்டன்) | ... 81 |
| 6. நரகர்கள் வேண்டாமா ? | ... ஏ. எடி. கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., பி. எல். | ... 92 |
| 7. சாந்தி | ... ஸூர்யதாஸன் | ... 95 |
| 8. புதுக் கீர்த்தனைகள் | ... ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல். | ... 102 |
| 9. கிராமத்தில் குடியேறியதும் | ... டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம். ஏ., எல். ஐ. எம். | ... 108 |



---


*"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.*



அது ருசிகரமாகவும், திருப்தி அளிக்கக்கூடியதாகவுமிருக்க வேண்டியது ... ஆனால் அது ஊக்கத்தை

# அளிக்கவும் வேண்டும்!




நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு சமையல் செய்யும்பொழுது எப்பொழுதாவது இதைப் பற்றி யோசிப்பதுண்டா? உணவிற்கு சுவை மாத்திரமிருந்தால் போதாது—அதை உண்பவருக்கு ஊக்கத்தையும் கொடுக்கக்கூடியதாயிருக்கவேண்டும். சில உணவுகள் மற்றவைகளை விட ஊக்கமளிக்கக் கூடியவை. நாம் வழக்கமாக உட்கொள்ளும் பல ஆகாரங்கள் ஊக்கத்தை யளிக்கக் கூடியவைகளல்ல. அவை நம் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல. உண்மையில் அவைகள் முக்கியமாக குழந்தைகளுக்கு கெடுதல் செய்யவும் கூடும். ஆனால் ஆகாரங்களை ஊக்கமுள்ளவையாகச் செய்வது கடினமில்லை. வைடமின் நிறைந்த டால்டாவினால் சமையல் செய்வது ஒரு வழி. டால்டா இயற்கையாய் ஊக்கமளிக்கக் கூடிய சில முக்கிய வஸ்துக்களை அளிக்கிறது. மேலும் டால்டாவைக் காட்டிலும் உணவுகளுக்கு ருசி அளிக்கும் வஸ்து வேறே கிடையாது. நீங்கள் உபயோகித்துப் பாருங்கள்.

ஒவ்வொரு ஸ்திரீயும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்க வேண்டும். டால்டா "குக்-புக்" (ஆங்கிலத்தில் மட்டும் எழுதியுள்ளது) உணவுப் பொருள்களின் தராதரத்தைப் பற்றியும், 150 இந்திய ஆகாரத் திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. உங்களிடம் ஒரு பிரதி இருக்கவேண்டியதவசியம். Dept. A109 P.O. Box No. 353 Bombay என்ற விலாசத்திற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

HVM. 38-53-40 TM HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.



### தவறிவிடாதீர்கள் !

ஜப்பானியர் சாதாரண எதிரிகள் அல்ல. அவர்கள் நேர்மையற்றவர்கள், கொடுமைக்கார துரோகிகள். மிருகத்தனமுள்ளவர்கள். பேராசை கொண்டவர்கள். சர்வதேச ஒப்பந்தங்களை மதிக்காதவர்கள். யுத்தக் கைதிகளை துன்புறுத்துபவர்கள். ஜெர்மனியர்கூட அப்படிச் செய்வதில்லை. அவர்களை ஒழிக்க ஒரே வழிதானுண்டு. தரை மேலும், கடல் மீதும், ஆகாயத்திலும் அவர்களை நொறுக்க வேண்டும். அவர்களுடைய சைனியங்களை அடியோடு முறியடிக்க வேண்டும். அவர்கள் பலத்தை அறவே அகற்றி கையாலாகாதவர்களாக்க வேண்டும். அவர்களை நிபந்தனையின்றி சரணாகதி அடையச் செய்யவேண்டும். வேறு எதுவும் இக்காட்டுமிராண்டிகளுடைய தொந்தரவினின்று இந்தியாவை நிரந்தரமாகத் தடுக்க முடியாது.

நீங்கள் தொழ வேண்டுமானால்:

# என்னை தொழுங்கள்!

"....நான்தான் கடவுளுக்குப் பிறந்த குட்டிக் கடவுள். நீ ஒரு கீழ்த்தர பிராணி. உன்னுடைய வேலை நான் சொல்லுகிறபடி பதில் பேசாமல் எனக்குப் பணி செய்து நடப்பதே...."

இப்படித்தான் ஜப்பானியன் பேசுகிறான். பேசுவது மட்டுமல்ல; அதைப் பூராவும் மெய்யென்று நம்புகிறான். அதன் கருத்தைக் கவனியுங்கள். அவன் மனதில் ஒரு சாதாரண ஜப்பானிய சிப்பாய் மிகச் சிறந்த இந்தியர்களைவிட தெய்வீக உரிமையினால் உயர்ந்தவன் எனக் கருதுகிறான், தாகூர், இக்பால், சி. வி. ராமன் போன்றவர்களைவிட உயர்ந்தவன். ஜப்பானிய போர் வீரன், வியாபாரி, தையற்காரன், சக்கிலியன், குடியானவன்கூட தன்னை ஓர் உயர் பிறவியாகவே மதிக்கிறான்.

அப்படிப்பட்ட ஓர் சமூகத்துடன் எப்படி பழகுவது? பார்க்கப்போனால் அவர்கள் பொறுப்பற்றவர்கள், தலைகால் தெரியாதவர்கள். அவர்களுடைய பைத்தியக்காரத்தனத்தைக் கண்டு பச்சாத்தாபப்படும்படி தோன்றினாலும்கூட அவர்கள் உண்மையில் வெறி பிடித்தவர்கள் என்பதை மறக்க வேண்டாம்! அவர்கள் ஆபத்தானவர்கள்!




எதிர்பாருங்கள்

பக்ஷிராஜா பிலிம்ஸ்

# ஜகதலப்ரதாபன்

சின்னப்பா

ஸரோஜினி · ஜீவரத்தனம் · வரலக்ஷ்மி.

ஸந்தானலக்ஷ்மி · கிருஷ்ணன் · மதுரம்

*Directed by* S.M. SRIRAMULU NAIDU

a NARAYANAN Co. *Release*

P.S.M.Co.

JT2A

# . சதி கஸ்தூர் பா

[நா. ர.]



காந்தியடிகளுக்கு உயிர்த் துணைவியாக வாழ்ந்து உலகத்தாரால் ஒருங்கே போற்றப்பட்டுத் தமது 74ஆவது வயதில் மாங்கலியத்தோடு பரமபதம் அடைந்த இந்த உத்தமியின் பிரிவைப் பற்றி நாம் வருந்தக்கூடாது என்றும் இதைக் கலியாணச் சாவாக நமது தேச மக்கள் கொண்டாடல் தகுமென்றும் ஒருபுறம் தோன்றினாலும் அது மனதுக்குச் சமாதானம் அளிப்பதில்லை. காராக்கிருகத்தில் — என்ன ஆகாகான் அரண்மனையானாலும், ஜெயில் ஜெயில் தானே—சுற்றத்தார் உறவினர் அன்பர்கள் யாரும்நெருங்கி வேண்டிய சௌகரியங்களையும் சிகிச்சைகளையும் செய்ய முடியாத சந்தர்ப்பத்தில், மன வேதனையாலேயே வெகு மும்முரமாக வளர்ந்த கொடிய ஹிருதய ரோகத்திற்கு இந்தப் பதிவிரதை இரையானதை நினைக்கும் போது நமது தேசத்தின் துரதிருஷ்ட நிலைமைக்கே இது ஒரு ஆதர்சம்போல் உள்ளத்தை வாட்டுகிறது. ஆனால் மகாத்மா பரம வைராகி, "தனியே இருப்பதற் கெண்ணினேன்" என்ற தாயுமானவர் மொழியை வெகு காலமாக அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தவர். அவர் உடல் மெலிந்து நோய் வாய்ப்பட்ட தன் தர்ம பத்தினியின் தேக வியோகம் அந்த அம்மையாருக்கு விரும்பத்தக்க விமோசனமாக வந்த தென்றெண்ணி ஒருவிதமாக ஆறுதல் அடைவாரே யொழியத் தனது மனோதிடத்தை யொருநாளும் இழக்க மாட்டார். தன்னை முக்தனாகவே எண்ணிக் கொள்வார் என்பது திண்ணம்.

ஸ்ரீமதி கஸ்தூர்பா பெரிய மேதையென்றோ படிப்பாளி என்றோ சொல்வதற்கில்லை. வெகு காலம் வரையில் நன்றாய் எழுதப்படிக்கக்கூட அவருக்குத் தெரியாமலிருந்தது வாஸ்தவமே. ஆனால் தானுண்டு, தன் வீடுண்டு, குடும்பம் உண்டு என்றுள்ள ஸ்திரீ வகுப்பிலும் அவர் சேர்ந்தவரல்லர். உலகம் முழுவதும் தன் குடும்பம் என்று கருதும் கணவனுக்கு மனமுவந்து நடக்கும் ஸஹதர்மிணியாய்த் தன் பிள்ளை குட்டி, சொந்தச் சுதந்திரம் என்ற தனியுணர்ச்சியை முற்றிலும் இழந்து எச்சாதியினரானாலும் எம்மதத்தினரானாலும் மகாத்மாவை நாடி வந்தாராகில் அவர்களைத் தம் மக்கள்போல அன்புடன் வரவேற்பதும், தேச சேவையில் ஈடுபட்ட தொண்டர்களுக்குத் தொண்டாற்றுவது தவிர மேலான கைங்கரியம் கிடையாது என்று உறுதிகொண்டு சதா ஊக்கமாக இருப்பதுமே இந்த அம்மணியின் ஜீவிய நோக்கமாயிற்று.

பழைய காலத்து மனுஷியென்றே கடைசி வரையில் பழகியவர்கள் சொல்வதைக் கேட்டால் நேர் பரிசயமில்லாதவர்களுக்கு இது சற்று ஆச்சரியமாக

# கஜேந்திர மோட்சம்

[பி. ஸ்ரீ.]

விஷ்ணு பக்தர்களுக்கு மிகவும் பிரியமான புராணக் கதைகளில் கஜேந்திர மோட்சமும் ஒன்று. ஒரு நீர் நிலையில் முதலையிடம் அகப்பட்டுக் கொண்ட ஒரு யானைக்காக 'அரை குலையத் தலைகுலைய' ஓடிவந்து துயர் தீர்த்துக் காத்தருளிய பகவான் ஸம்ஸார சமுத்திரத்திலே ஐந்து முதலைகளின் வாய்ப்பட்டுத் தவிக்கும் நம்மைக் காப்பாற்றாமல் கைவிடப் போகிறானா? என்று ஆறுதல் அடைகிறார்கள்.

எங்கும் உள்ள கடவுள், எல்லாம் ஆகிய கடவுள், எல்லாம் வல்ல கடவுள், எல்லாவற்றையும் கடந்து நிற்கும் கடவுள் - என்றெல்லாம் வேதாந்திகளும் சித்தாந்திகளும் பேசுகிறார்கள் அல்லவா? ஆனால் இதே கடவுள் யானையின் துயரம் காத்தார் என்று சொல்வதிலே பக்தர்களுக்கு விசேஷ ஆறுதல்; விசேஷ திருப்தி.

இப்போது பின்வரும் பாட்டைப் பாருங்கள்.

இறையும் நிலனும் இருவிசும்பும் காற்றும்
அறைபுனலும் செந்தீயும் ஆவான்,—பிறை மருப்பின்
பைங்கண்மால் யானைப் படுதுயரம் காத்தளித்த
செங்கண்மால் கண்டாய் தெளி.

[இறையும் - இறைவனும்; நாதனும். நிலனும் - நிலமாகவும். இரு விசும்பும் - பரவிய ஆகாசமாகவும். அறை புனலும் - அலை எறியும் தண்ணீராகவும். பிறை மருப்பின் - பிறைபோன்ற தந்தத்தையுடைய. பைங்கண் - பசுமை தங்கிய கண்களையுடைய. மால் யானை - பெரிய யானை. செங்கண்மால் - செம்மையான கண்களையுடைய விஷ்ணு.]

எல்லாவற்றையும் கடந்து நிற்கும் இறைவனாக இருந்தும் எம்பெருமான் தன்னுடைய 'பரத்வம்' என்ற அந்த மேன்மையோடு நின்றுவிடவில்லையாம். நிலம், வானம், காற்று, தண்ணீர், தீ ஆகிய எல்லாவற்றிலும் அந்தர்யாமியாகப் பரவியும் இருக்கிறானாம். எல்லாவற்றுக்கும் நாதன், எங்குமாகிப் படர் கொடிக்குக் கொழுகொம்புபோல் நின்று காப்பாற்றுகிறானாம். ஸர்வேச்வரன் ஸர்வாந்தர்யாமியாக நின்று வேற்றுமை

---

இருக்கலாம். ஆசாரச் சீர்திருத்தத்தைப் பற்றிய வரையில் வெகு தீவிரமான கொள்கைகளைக் கைப்பற்றிய காந்தியடிகளின் வாழ்வில் கலந்தும், ராஜீய விஷயங்களில் புரட்சி புரியும் துறைகளில் அவர் இறங்கினபோதெல்லாம் பின் வாங்காமல் அனுசரித்தும் சிறைவாசம் முதலிய பலவிதக் கொடுமைகளை அனுபவிக்க நேர்ந்ததையும் சற்றும் லட்சியம் செய்யாமலும் மனந்தளராமலும் மகாத்மாவின் சீடர்களிடையே முதன்மை ஸ்தானம் பெற்று விளங்கின ஸ்ரீமதி கஸ்தூர்பாவிடத்தில் புது நாகரிகத்தின் சின்னங்கள் கொஞ்சமும் காணப்படவில்லை. காரணமென்னவென்றால் சீதை சாவித்திரி போன்ற மகா பதிவிரதைகள் மரபில் தோன்றின இந்தப் பெண்மணி புருஷனைத் தெய்வமென்று கொண்டு அவர் கீறின கீற்றைத் தாண்டாமல் நடப்பதைத் தவிர மேலான தர்மம் கிடையாது என்ற நம்பிக்கையில் இவ்வளவு சாகசச் செயல்களைச் செய்தார். ஸ்திரீ சுதந்திரம் என்ற கொடி நாட்ட வேண்டுமென்று ஆசைப்படுபவரும் முற்போக்காளர் என்று தங்களைப் புகழ்ந்து கொள்ளுபவருமான தற்காலத்து ஸ்திரீகள் இதை மூடநம்பிக்கை யென்று இகழலாம். ஆனால் இந்த மூட நம்பிக்கையின் பலனைத் தான் மகா புத்திமான்களாலேயும் எளிதில் ஆழ்ந்து பார்க்கமுடியாத தத்துவங்களை ஸ்ரீமதி கஸ்தூர்பா சிரமமில்லாமல் பின்பற்றி, அதன் பலனை ஆர்வத்துடன் தன் கணவனின் ஏவல்களில் ஈடுபட முடிந்தது என்பது குறிப்பிடத்தகுந்தது. ஸ்ரீமதி கஸ்தூர்பாவின் ஆன்மா சாந்தி அடைக.

பாராட்டாமல் நம்மைக் காப்பாற்றுவதோடு, நேரில் ஓடி வந்து துயரம் தீர்த்து அடியவர்களைக் காத்தருளும் அன்பனாகவும் இருக்கிறான்.

"பிறை மருப்பின் பைங்கண்மால் யானை" என்று யானையின் தந்தத்தையும் கண்ணையும் வருணிப்பது கவனிக்கத் தக்கது. கிணற்றிலே விழுந்த குழந்தையைக் கரையிலே எடுத்துப் போட்டவர்கள் கண்ணைக்கசக்கிக்கொண்டு, "ஐயோ! என்ன முக அழகு! என்ன தலையழகு! இந்தக் கைகால்களின் அழகைத்தான் பாருங்கள்! தந்தப் பாவைபோலிருக்கிறதே!" என்றெல்லாம் சொல்லிச் சொல்லி மாய்வார்களல்லவா? அப்படியே அன்புக் கடவுளும் (செங்கண்மால்) முதலை வாயிலிருந்து விடுவித்த யானையினுடைய தந்தத்தின் அழகிலும், கண்ணின் அழகிலும்ஈடுபட்டுக்கரைந்தாராம்.

முதலை வாயிலிருந்து யானையைக் காப்பாற்றிக் 'கஜேந்திராழ்வான்' என்ற பெயரையும் புகழையும் அளித்த பெருமான், பஞ்சேந்திரியங்களென்ற ஐந்து முதலைகளின் வாயிலிருந்து நம்மையும் காப்பாற்றுவானென்று பக்தி மதம் உறுதி கூறுகிறதல்லவா? ஆனால் பஞ்சேந்திரியங்களையும் மதம் பிடித்த யானைகளைப்போல் கண்டபடி எங்கும் திரிய விடுகிறவர்களுக்கு, பகவத் கிருபையும் பயன்படுவதில்லை - என்கிறார் பொய்கையார்.

புலன் அடக்கம் என்ற கட்டுப்பாடு உயர்தர வாழ்விற்கு இன்றியமையாதது. புலன் அடக்கத்தால் சிந்தையையும் வாழ்வையும் செந்நெறியிலே செலுத்துகிறவர்கள்தான் மெய்ஞ்ஞானம் என்ற சம்பத்தைப் பெற்று ஈச்வர கிருபையையும் பெறுவார்கள்.

இனி இந்தப் பாட்டைப் பாருங்கள்:

வாரி சுருக்கி மதக்களி(று) ஐந்தினையும்
சேரி திரியாமல் செந்நிறீஇ—கூரிய
மெய்ஞ்ஞானத் தால்உணர்வார் காண்பரே,
கைந்நாகம் காத்தான் கழல். [மேலொருநாள்

[வாரி - நீர்; (இங்கே) தாகத்தையும் தாபத்தையும் உண்டாக்கும் விஷயங்கள். மதக் களிறு - மதம் பிடித்த யானைகள். சேரி - (இங்கே) கண்ட, கண்ட இடங்கள். செந்நிறீஇ - செவ்வையாக நிறுத்தி. கைந்நாகம்- தும்பிக்கையோடு கூடிய யானை; (இங்கே) கஜேந்திராழ்வான். கழல் - திருவடிகள்.]

புலன்களை அடக்கவும், வாழ்வை ஒருவாறு கட்டுப்படுத்தவும், ஒவ்வொரு மதத்திலும் கர்மானுஷ்டானங்கள் உண்டு. இந்து மதத்திலும் ஸந்தியாவந்தனம் முதலிய எத்தனையோ கர்மானுஷ்டானங்கள் இருக்கின்றன; ஜபம் செய்வதற்கும் உருவேற்றுவதற்கும் எத்தனையோ மந்திரங்கள் இருக்கின்றன.

எனினும், 'ஜபதபங்களால் என்ன பயன்? கேவலம் கர்மானுஷ்டானங்களால் பயன் என்ன? பக்திதான் பெரிது; ஞானம்தான் பெரிது' என்று எத்தனையோ ஞானிகளும் பக்தர்களும் உபதேசித்து வந்திருக்கிறார்கள்.

இவ்விஷயமாகவும் பொய்கையாழ்வார் என்ன சொல்லுகிறார்? பார்ப்போம்:

நகரம் அருள்புரிந்து நான்முகற்குப் பூமேல்
பகர மறைப்பயந்தபண்பன்—பெயரினையே
புந்தியால் சிந்தியா(து) ஓதிஉரு எண்ணும்
அந்தியால் ஆம்பயன்(அங்கு) என்?

[நகரம் - (இங்கே) இருப்பிடம். நான்முகற்கு - பிரமனுக்கு. பூமேல் - நாபிக் கமலத்திலே. பகர - ஓதும்படி. மறைப்பயந்த - வேதத்தைக் கொடுத்த. பண்பன் - குணசாலியான பகவான். புந்தி - புத்தி. அந்தி - (இங்கே) ஸந்தியாவந்தனம் முதலிய கர்மானுஷ்டானங்கள். என் - என்ன?]

வைதிகர்கள் வேதங்களை உருச் சொல்லுகிறார்கள்; ஜபங்கள் செய்கிறார்கள்; ஸந்தியாவந்தனம் முதலிய நித்திய கர்மானுஷ்டானங்களில் போதுபோக்குகிறார்கள். ஆனால் பொய்கையாழ்வார் பகவத் பக்திதான் முக்கியம் என்கிறார். பகவந்நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டு அந்த நாமங்களின் பொருளாகிய திவ்ய குணங்களை மனப்பூர்வமாகப் புத்தியோடு சிந்திப்பதே, இந்திரிய ஜயத்திற்கும், பகவானுடைய அருளைத் துணையாக அடைந்து நல்வாழ்வு வாழ்வதற்கும் ராஜபாதை என்கிறார்.

காலஞ்சென்ற, கும்பகோணம் அத்வைத ஸபா
பண்டிதராயிருந்த மஹாமஹோபாத்யாய, சாஸ்திர ரத்னாகர, மஹோபதேசக,
பிரும்மஸ்ரீ - யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் இயற்றிய

# ஸம்ஸ்கிருத கீர்த்தனை

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

## கீர்த்தனை 2

பியாகட ராகம்] [ரூபக தாளம்

### ஸாஹித்யம்

பல்லவி

ஸரஸிருஹா ப நயநே

அனுபல்லவி

விது வதனே, ம்ருதுஹஸநே, சுபவசனே.

சரணம்

குண ஸதனே, நதசரணே,
ஸுலலித ஸுமசர காயே
விதளித நிசிசர மாயே
தசரத ஸுக்ருத நிகாயே
நவஜல தரஸச் சாயே
கவி யக்ஞாந்தர நிலயே
குரு வஸ்துனி ஹ்ருதயமயே.

### தாத்பர்யம்

அடே! தாமரை போன்ற கண்ணுடையதும், சந்திரன் போன்ற முகமுடையதும், மந்தஹாஸமுடையதும், மங்களகரமான வசனமுடையதும், குணங்களுக்கு இருப்பிடமானதும், அண்டினவர்களைக் காப்பதும், மன்மதன் போன்று அழகு வாய்ந்த வடிவுடையதும், அரக்கர்களின் வஞ்சகத்தை ஒழித்ததும், தசரதனின் அருந்தவப் பயனானதும், நீருண்ட மேகத்திற் கொப்பான மேனியுடையதும், யக்ஞேச்வர கவியின் அந்தரங்கத்தில் குடி கொண்டதுமான பரம்பொருளிடத்தில் உன் சித்தத்தை நிலை நாட்டு.

பல்லவி

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | க ம ப த பா | பாஅம | கம | பமகரி |
| | ஸ ர ஸி ரு ஹா | பாஅஅ | நய | னேளளள |
| (2) | ஷை | பதாப | பதபம | கமகரி |
| | | பஅஅ | நஅயஅ | னேளளள |
| (3) | ஷை | பதநீ | தப | பமகரி |
| | | பஅஅ | நய | னேளளள |
| (4) | ஷை | ஸஅஅப | பதநிநி | தபமக |
| | | பாஅஅ | நஅயஅ | னேளளள |

(5) ஷை மகரிஸ ஸநிதப மககரி
(6) ஸரஸிரு ஹா

அனுபல்லவி

(1) த ப ஸ ஸ ஸா தாஅப ஸாஅநி ரீஇஸ
விது வ த னே ஏ ஏ ஏ ஏ ஏ ஏ

(2) ஷை கா அம ரீ ஸா
ஏ ஏ ஏ ஏ

(3) ஷை மா தபமா ரீஸா
ஏ ஏஏஏ ஏஏ

ஷை கம பத பா
ம்ருது ஹஸ மேனஏ

(1) ஸ ப பதநீ தப மா தபமா ரீஸா
சு உ பஅஆ அவ ச அஅஆ ஆமேனஎ

(2) ஷை கமபத நிநிதப மகமரி
சஅஅஅ அஅஅஅ னேஎஎஎ

ஸரஸிருஹா

சரணம்

(1) கமபம கமபம கமகரி கமபம மபதப நிநிதப
குஉஉஉ ணஅஅஅ ஸஅஅஅ தஅஅஅ அஅனேஎ நஅஅஅ

மதபம கமகரி மதபா அஅ அஅ அஅ
அஅஅஅ அஅதஅ சரணே எஎ எஎ எஎ

(2) பதபப பஸஸஸ ஸஸ நிரிஸரி நிநிநிஸ தப
ஸுலலித ஸுமசர காயே விதனித நிசிசர மாயே

தாஅப ஸாஅநி ரீஸ ஸா, ஆ ஆ
ஏஏ ஏஏ ஏஏ ஏ ஏ ஏ

பதபப பஸஸஸ ஸஸ நிரிஸரி நிநிநிஸ தப
ஸுலலித ஸுமசர காயே விதனித நிசிசர மாயே

(3) நிரிஸரி நிநிநிஸ தப பதபப பபபா ஸஸ
தசரத ஸுக்ருதநி காயே நவஜல தரஸச் சாயே

(4) கககா கமரிரி ஸஸஸா நிரிஸாரிநி ததபப ஸ
கவியக் ஞாந்தர நிலயே குருவஸ்துனி ஹ்ருதயம யே

ஷை நிரிஸநிதப மபம கமரி
குருவஸ்துனி ஹ்ருதயம யேஎ

ஸரஹி ருஹா

---

குறிப்பு :—*கைசிக நிஷாதம்.

# பிர்லா குடும்பம்

பிர்லா சகோதரர்கள் என்ற வாக்கியம் இன்று இந்தியாவில் பிரபலமாக அடிபடுகிறது. அவர்கள் தொட்டதெல்லாம் பொன்னாக மாறும் சக்தி வாய்ந்தவர்கள். நூறு வருஷங்களுக்கு முன்பு ராஜபுதன பாலைவனத்தில் முளைத்து வளர்ந்து இப்பொழுது தழைத்தோங்கும் அக்குபேர குடும்பத்தைப்பற்றி ஸ்ரீ ஸ்டுவர்ட் எமனி என்பவர் 'நியூஸ் கிராணிகிள்' பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்.

சுமார் நூறு வருஷங்களுக்கு முன்பு, ராஜபுதன பாலைவனத்தில் பிளானி என்னும் ஊரிலிருந்து 17 வயது நிறைந்த பாலகன் ஒருவன் தனது வீட்டை விட்டுப் புகழும் பொருளும் ஈட்டுவதற்குக் கிளம்பினான். 10 தினங்கள் பாலைவனத்தில் ஒட்டகத்தின்மீது சுமார் 250மைல்கள் பிரயாணம் செய்தும் அதன் பிறகு ரயில்மூலம் பம்பாய் சேர்ந்த ஸ்ரீசிவ நாராயண பிர்லா, அங்கு ஒரு தனி அறையை வாடகைக்குப் பேசி அதைத் தனது காரியாலயமாக உபயோகித்துக் கொண்டார். முன்பின் தெரியாத அப் பெரிய பட்டிணத்தில், தன்னிடமிருந்த சில நூறு பவுன்களைக் கொண்டு வெள்ளி, விதைகள் வியாபாரத்தில் அவர் இறங்கியதுதான் மிகவும் ஆச்சர்யப்படத் தக்க விஷயம். 7 வருஷங்களில் ஆயிரக்கணக்காக அவர் சம்பாதித்து விட்டார்.

அவருடைய ஒரே பிள்ளை ராஜா புல்தியோதாஸ் பிர்லா சிறு வயதிலேயே தகப்பனாரின் வர்த்தகத்தைப் பிடித்துக் கொண்டார். கல்கத்தாவில் ஒரு கிளை காரியாலயம் திறக்கப்பட்டது. தங்கம் வெள்ளி வர்த்தகம் பெருகியது. இங்கிலாந்துக்கு பருத்தி அனுப்புவதிலும் அங்கிருந்து ஜவுளி வரவழைத்து வியாபாரம் செய்வதிலும் அவர் ஈடுபட்டார். ராஜா பிர்லாவும் அவருடைய தகப்பனாரும் வர்த்தக மன்னர்களாகியும், அவர்கள் ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை பேசியது கிடையாது. அப்பாஷை இல்லாமலே அவர்களுடைய வர்த்தகம் அபிவிருத்தியடைந்தது. இவருடைய நான்கு குமாரர்கள்தான் இப்பொழுது பிரபலமடைந்திருக்கும் பிர்லா சகோதரர்கள். ஸ்ரீமான்கள் ஜுகால் கிஷோர் பிர்லா, ராமேஷ்வர்தாஸ் பிர்லா, கான்ஷியாம்தாஸ் பிர்லா, பிரிஜ்மோஹன் பிர்லா - இந்தியத் தொழிற் தலைவர்கள், வர்த்தகமும் தொழிலும் ஆங்கில வர்த்தகர்களிடம் சிக்கியிருப்பது கண்டு, அதற்குப் பரிகாரம் தேட ஆரம்பித்தனர். இந்தியா சுதந்திரம் அடைய வேண்டுமானால் அது தொழில் நாடாக வேண்டுமென்பதே அவர்களுடைய விருப்பம். இதற்காக அவர்கள் ஆங்கிலம், பொருளாதாரம், நிதி சாஸ்திரம், அரசியல், சர்வதேச வியவகாரங்கள் மற்றும் பல சாஸ்திரங்களைக் கற்றனர். ஸ்ரீ ஜி. டி. பிர்லா ஒரு அரசியல் பொருளாதார நிபுணர். ஸ்ரீ ஜே. கே. பிர்லா பின்வாங்காது எதிலும் தைர்யமாக இறங்குபவர். ஸ்ரீ ஆர். டி. பிர்லா வர்த்தக ரகசியத்தில் கைதேர்ந்தவர். ஸ்ரீ பி.எம். பிர்லா, நவயுக வர்த்தகத்தின் நுணுக்கங்களை அறிந்தவர். இந்நால்வரின் ஒற்றுமையான கூட்டு வியாபாரமே கோடிக்கணக்கான ஆஸ்தியைக் குமித்துவிட்டது.

பிர்லா சகோதரர்கள் இந்தியாவில் பல்வேறு தொழில்களை ஆரம்பித்திருக்கின்றனர். இப்பொழுது அவர்களிடம் 7 சர்க்கரை மில்களும், 5 பஞ்சாலைகளும், மற்றும் பருத்தியைச் சுத்தி செய்யும் 10 மில்களும், யுத்த தளவாடங்கள், சைகிள், பஞ்சாலைக்கு வேண்டிய உருப்புகளை உற்பத்தி செய்யும் 3 தொழிற்சாலைகளும், சணல் மில்

1, காகித உற்பத்தியில் 1 முதலியவைகளும் இருக்கின்றன. மேலும் அவர்கள் 2 பெரிய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளையும், ஒரு பெரிய பாங்கியையும் நடத்தி வருகிறார்கள். இவர்களிடம் 50,000 தொழிலாளிகள் பிழைத்து வருகின்றனர். வருஷம் 180 லட்சம் பவுன் மதிப்புள்ள சமான்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

பிர்லா சகோதரர்கள், தாங்கள் முதலாளிகள் என்றுகருதாமலே தொழிலாளிகளிடம் நடந்துகொண்டு வருவதைப் பாராட்டாது இருக்கமுடியாது. புழுதியும் புகையும் அடைந்து, மனிதத் திரள் இடம் விடாமல் குழுமியிருக்கும் நகரங்களுக்கு வெகு தூரத்துக்கப்பால் நல்ல காற்றும், சுகாதாரமுமுள்ள நாட்டுப் புறத்தில்தான் அவர்களுடைய தொழிற்சாலைகள் அமைந்திருக்கின்றன. தொழிலாளிகளுக்கு எல்லா வசதிகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் தொழிலாளர்களுக்கு வீடுகள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள், கடைகள், ஹோட்டல்கள் அந்தந்தத் தொழிற்சாலைப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. சம்பளம் அதிகம், வசதிகளும் அதிகம், பின் தொழிலாளர்களுக்கு என்ன குறைவு?

பிர்லா குடும்பமே தர்மத்துக்குப் பெயர்போனது. ஸ்ரீ. ஜே. கே. பிர்லா புது டில்லியில் ஒரு அழகான கோயிலைக் கட்டியிருக்கிறார். அவர்களுடைய சொந்த ஊரான பிளானியில்மட்டும் பிர்லா சகோதரர்கள் ஒரு கல்வி நிதி ஏற்படுத்தி வருஷம் ஒன்றுக்கு கல்விக்காக மட்டும் 10 லட்சம் ரூபா செலவழிக்கிறார்கள். மன்னர் இந்தியக்கடற்படைப் பள்ளிக்கூடமொன்று அவர்களுடைய தர்மத்தில் நடந்து வருகிறது. ஜெய்ப்பூர் சமஸ்தானத்தில் பிர்லா தர்மத்தில் 33 பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. 13,000 குழந்தைகளுக்குக் கல்விச் செ ா த் தை அளித்து வரும் பெருமை இவர்களைச் சார்ந்ததாகும்.

வியவசாயத்திலும், தொழிலிலும் மேன்மையுடன் விளங்கும் சுதந்திர இந்தியாவை ஆவலுடன் எதிர்பார்க்கும் தேசபக்தர்களின் முன்னணியில் நிற்பவர்கள் பிர்லா சகோதரர்கள். மகாத்மா காந்தியின் அத்யந்த நண்பர்கள்.

இன்று அவர்களுடைய குமாரர்கள் நன்றாகப் பயிற்சிபெற்று வருகின்றனர். கூடிய சீக்கிரம் பிர்லா தொழில்களையெல்லாம் நிர்வகிக்கப்படுவதற்குப் போதிய திறமையை அடைந்ததும் அவர்களிடம் எல்லாவற்றையும் ஒப்படைக்கப்படும். யுத்த பிற்காலத்தில் இந்தியாவில் மோட்டார் உற்பத்தியும் ரசாயன பொருள்கள், மின்சார சாமான்கள் உற்பத்தியும் இவர்களுடைய மேற்பார்வையில் நடைபெறும் என்பது திண்ணம்.

---


# திரு. வி. க.

## வாழ்க்கைக் குறிப்புக்கள்

இந்நூல் 1028 பக்கங்கொண்டது

ஆக்கியோர் :

**திரு. வி. கலியாணசுந்தரனார்**

காகித நெருக்கால் சொற்பப் பிரதிகளே அச்சிடப்பட்டன

**விலை ரூ. 12-8-0**

**முருகவேள் புத்தகசாலை,**

12, கணபதி முதலி தெரு,

இராயப்பேட்டை, சென்னை.




# குழந்தைகளுக்கு ஆரோக்யம் அளிக்கிறது

ஏதோ ஒருவித மாறுபாட்டுடன், சிடுமூஞ்சித்தனம் பண்ணி, எவ்வித காரணமும் வெளிப்படையாக இல்லாமல், குழந்தை ஓலமிட்டழுதால், அதற்கு ஜீரண சக்திக் கோளாற்றினால் ஏற்பட்ட தாங்கொணாதவலியே காரணமாக இருக்கும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கிரைப் சிரப் ஐ. டி. எல். உடனடியான சிகித்ஸை செய்வதோடு, மேற்கொண்டு விருத்தியாகக் கூடிய பெரும் இன்னல்களையும் வராமல் தடுக்கிறது. கைவசம் எப்போதும் ஒரு பாட்டிலை வைத்திருங்கள்.

# கிரைப் சிரப்

கவர்ன்மெண்டு இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லேபரடரி, மல்லேசுவரம், பெங்களூர்.

ஏஜண்டுகள் :—மெஸர்ஸ் பெஸ்டு அண்டு கோ., லிமிடெட்.,
தபால் பெட்டி 63, மதராஸ்

# பிரம்ம ஞானம்

[ஸ்ரீ டி. எஸ். ராமாநுஜம், எம். ஏ., எல். எல். பி. (லண்டன்)]

## புதுயுகப் பிறப்பு

தாருண வருஷம் மாசி மாதம் முதல் தேதி அமாவாசையன்று கலி யுகம் முடிந்து துவாபர யுகம் ஆரம்பிக் குருட்டுக் கணக்கைத் தள்ளுவதும் நீதமே. சில அவசரக் குடுக்கைகள் 1943௵ ஆகஸ்ட் மாதம் முதல் தேதியே கலி முடிந்துவிட்ட தென்றார்கள். சாஸ்திரோக்தமாக நாம் ஆராயுங்

| | யுகம் | யுகாதி | யுகாந்தம் |
|---|---|---|---|
| 1 | கிருத யுகம் | கார்த்திகை சுத்த நவமி திதி | சிம்ம சங்கிராந்தி (ஆவணி௴ 1௳) |
| 2 | திரேதா யுகம் | வைகாசி சுத்த திருதியை திதி | விருச்சிக சங்கிராந்தி (கார்த்திகை௴ 1௳) |
| 3 | துவாபர யுகம் | மாசி அமாவாசியை திதி | விருஷப சங்கிராந்தி (வைகாசி௴ 1௳) |
| 4 | கலி யுகம் | பாத்ரபத பகுளத் திரியோதசி திதி | கும்ப சங்கிராந்தி (மாசி௴ 1௳) |

கும். "இது என்ன அதிசயப் பேச்சு, கலியுகாந்தத்துக்குப் பிறகு கிருத யுகாதி அல்லவா?" என்று அவசரப் பட்டு கேட்காதீர்கள். ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டல்லவா!

நான்கு யுக ஆரம்பங்கள் சாந்திரமான ரீதியிலும் (அதாவது அமாவாசை கழிந்த பிரதமை திதி முதலிருந்தும்), அவற்றின் முடிவுகள் சௌரமான ரீதியிலும் (அதாவது சூரியன் அந்தந்த ராசிப் பிரவேசமான மாத முதல் தேதியிலிருந்தும்) கணிக்கப்பட்டிருக்கிறது. சாந்திரமான தேதிகள் யுகாதிகளில் வருஷா வருஷம் மாத வித்தியாசப்படும். ஆனால் தாருண௵ மாசி௴ 1௳ சூரியன் கும்பராசியில் பிரவேசிக்கவும் அன்று அமாவாசையாக இருப்பதும் ஒரு அசாதாரணமான சம்பவம். மேலும் கலி முடிந்த மாதத்தில் எந்த யுகம் ஆரம்பிக்கிறதோ அதுதான் கலிக்கு அடுத்த யுகம் என்று கொள்ள வேண்டும். கலி மாசி மாதம் முடிய கிருதம் கார்த்திகையில் ஆரம்பிப்பதென்றால் கலிக்குப் பிறகு கிருத யுகம் என்ற கால், மேற்கண்ட தருணம் தாருணமாக நீண்டுவிட்டது போலும்!

ஒரு வருஷம் பிறந்தாலே எவ்வளவோ கொண்டாட்டங்களை நடத்துகிறோம். ஒரு யுகம் பிறந்தால் நாம் என்ன செய்வோமோ, தெரியவில்லை. இறக்கையில்லாமலே ஆகாயத்தில் நாம் பறக்கவும் கூடும். மனிதனுக்கு எது தான் அசாத்தியம்! போதும் போராததற்கு அடுத்த தாருண௵ மாசி மாதத்தில் மகாமகம் என்று சொல்லுகிறார்கள். அப்போது குரு அல்லது பிரகஸ்பதி என்ற கிரகம் சிம்மராசியில் சஞ்சரிக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் குரு கன்னியாராசியில் உத்திரம் இரண்டாம் பாதத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும். கலியுக ஆரம்பத்திலிருந்து இது வரையில் வந்து சென்ற மகாமகத்திற்கெல்லாம் குரு சிம்மராசியில் இருந்திருக்கிறது. மேலும் அதற்கடுத்த பங்குனி௴ "அதிக சித்திரம்" வருகிறது. தற்சமயமுள்ள கலியின் கூற்றை நினைக்குங்கால் இந்த யுகம் ஒழிந்து துவாபர யுகம் பிறப்பதே ஓர் அதிகச் சித்திர

மன்றோ! மேலும் பல்வேறு விசித்திரங்களேயும் நாம் காணக்கூடும். யுகமே மாறுமென்றால் யுக தருமமும் மாறுமல்லவா!

## புதுயுக கந்தாய பலன்

இந்த யுகம் முடிவதுடன் நாம் இதுவரையில் கற்ற தலேகீழ் பாடங்களும் முடியும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற பாடம் அப்பொழுது திருப்பிப் படிக்கப்படும். நமது முன்னோர்கள் நம் வாழ்நாளே நான்கு பாகமாகப் பிரித்து, முதலில் உடல் வளர்ச்சியையும், பிறகு குடும்ப வாழ்க்கையையும், அதன் பிறகு யோகாரம்பத்தையும் கடைசியாக ஞானமடைவதையும் வைத்தார்களாம். ஆனால் வயதாகி உடல் தளர்ந்த பிறகு யோகம் செய்து ஞானமடைவது எவ்வாறு? மேலும் ஒருவனுக்கு முதலில் ஞானமில்லையா? இன்று பிறந்த குழந்தை, அதற்கேது ஞானம் என்று அங்கலாய்ப்புபடுகிறோமே. அதற்கு ஞானமில்லாமலா அன்னேயிடமிருந்து அது பாலே வெகு சாமர்த்தியமாக உறிஞ்சிக் கொள்ளுகிறது? அது இன்னவிதமாகக் கிரகித்தால் பால் வருமென்ற ஞானத்தை யோகத்தின் பயனுகவா அடைந்திருக்கிறது? பிறப்புடன் வரும் இயற்கை ஞானம் முதலாகவும், ஞானமும் வயதும் கூடிவளர, தன்னிலே அடைந்து, திடத்துடன் கூடிய காலத்தில் யோக மார்க்கத்தில் லயித்து, அதனால் சிருஷ்டியின் கிரிய பாலனேகளே உணர்ந்து அதனால் சரீரத்தை (சரி ஈரத்தை) எக்காலும் காப்பது என்ற இக்கிரமமே நிஜமென்று இந்த யுகம் முடிவதற்குள்ளாவது நாம் அறிவோமா!

பிரம்ம, க்ஷத்திரிய, வைஸ்ய, சூத்திரர் என்ற தலேகீழ் பாடத்தின் உண்மை என்ன? சிருஷ்டிக் கிரமத்தில் 'புனரபி ஜனனம், புனரபி மரணம்' என்ற சுழலில் அடிபட்டு அநுபவ ஞானம் முதிர்ந்தவனே பிரம்ம ஞானம் பெறுகிறுன். அவனே பிராமணன் என்ற பதத்தை அடைகிறுன். பிராமணன் என்ற பதத்தை சேதம் செய்து அதிலிருந்து வரும் ஸப்தங்களே ஆராய்ந்தால், சிருஷ்டி கர்த்தா அல்லது ஆதிமூலமென்ற பிரம்மத்தைக்கண்டு கொள்ளல் வேண்டுமென்று அதை மனனம் செய்பவன் என்ற பொருள் கிடைக்கும். வேடிக்கையாக இப்பொழுது பிராமணன் என்று சொல்லப்படும் ஒருவனேப் பார்த்து "நீ நாலாம் ஜாதியைச் சேர்ந்தவன்" என்றால் அவன் மூக்குமேல் கோபம் வருவது நிச்சயம். ஏன்? நாலாம் ஜாதி என்றால் சூத்திர ஜாதி என்று எண்ணுகிறுன். நிஷ்கலங்கமான மனதுபோல் வெள்ளேயான பாலேக் காய்ச்சி உறை குத்தினுல் தயிராகிறது. அத்தயிரைக் கடைந்தால் வெண்ணெய் திரளுகிறது. அவ்வெண்ணெயை உருக்கினுல் நெய்யாக மாறுகிறது. பாலுக்கு அதன் அனுபவந்தான் உண்டு. ஆனால் தயிருக்கு அதன் அனுபவமும் பாலாயிருந்த அனுபவமும் உண்டு. இவ்விதம் வெண்ணெய்க்கு மூன்று அனுபவங்களும் நெய்க்கு நான்கு அனுபவங்களும் முறையே உண்டு. பாலின் அனுபவ முதிர்ச்சியே நெய். பால் நெய்யாகுமே யொழிய, நெய் பாலாகாது. இவ்வுதாரணத்தை ஒட்டி மனிதப் பிறவியை கவனித்தால் பிறவி எடுக்கெடுக்க ஞான மதிகமென்ற உண்மை தெளிவாய்த் தோன்றும். அதிகப் பிறவி எடுக்காத மனிதன் உலகஞானம் ஏதுமின்றிப் பிறரிடத்தில் தாழ்ந்தும் பணிந்தும் அடிமை போல் அண்டிப் பிழைப்பான். அவனே சூத்திரனுவான். அவன் பிறவி சற்று அதிகமாகவே, சுய மனோபாவங்களே அடைந்து சுயமாகச் சம்பாதித்துப் பிழைப்பான். அவனே வைஸ்யனுகிறுன். இன்னும் சில ஜென்மாக்கள் பிறகு சுய மனோபாவங்கள் முதிர்ந்து தன்னே உயர்ந்தோனுக எண்ணி "நான்" என்னும் அகம்பாவத்தை அடைந்து க்ஷத்திரிய தர்மத்தைக் கைப்பிடிப்பான். கடைசியாக அதிக ஞானத்தால் 'நான், நீ' என்ற வேற்றுமை புத்தியை அகற்றி, எவ்வுயிரிடத்திலும் அன்பைக் காட்டி, ஈஸ்வர சிருஷ்டியின் மேன்

மையை உணர்ந்து, பிரம்ம வித்தையை ஆராய்ந்து பிராமணனுவான். இது போலவே ஒரு குழந்தை பிறந்து சுய அறிவு அடையும் வரையில், அது சூத்திர அம்ஸமென்றும், பிறகு சுய அறிவடைந்து தொழில் புரிந்து பொருள் தேடும் காலத்தில் வைஸ்ய அம்ஸமென்றும், பிறகு தன்னைத்தானே அடக்கி ஆளும் காலத்தில் க்ஷத்திரிய அம்ஸமென்றும், பிறகு ஞான பாதங்களை ஆராயும்போது பிராமண அம்ஸமென்றும் கருதலாம்.

மேல் கூறியவாறு கிறிஸ்துவர்களிடையேயும், முகம்மதியர்களிடையேயும், பறையர்களிடையேயும் பிராமணன் இருக்கிறுன் என்பது மறுக்கமுடியாத உண்மை. பிராமண ஜாதியில் பிறந்துவிட்டதால் பிராமணன் என்று சொல்லிக்கொள்வது அடிப்படையான உண்மையையொட்டி அல்ல. வசிஷ்டன் ஊர்வசி என்ற தாசியின் பிள்ளை. அவன் மணந்துக்கொண்டது அருந்ததி என்ற சக்கிலியப் பெண்ணை. தபோமகிமையால் அவன் பிராமணன் ஆனுன். கற்பின் சிறப்பால் பிராமணன் முதல் யாவரும் திருமண காலத்தில் "அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல்" என்றவாறு அன்னுளை நமஸ்கரிக்கும் ஏற்றம் உண்டாயிற்று. "எக்குடியிற் பிறந்தாலும் யாவரே யாயினும் அக்குடியிற் கற்ருேரை வருகவென்பர்" அல்லவா? ஆங்கிரசன், விசுவாமித்ரன் முதலிய க்ஷத்திரியர்களும் விசேஷ அறிவினுல் தபோபலம்பெற்றுப் பிராமணபதத்தை அடைந்தார்கள். இவ்விதமே பல ரிஷிவர்க்கங்களை ஆராய்ந்தால் அவர்கள் கீழ் ஜாதியில் பிறந்து ஞான முதிர்வால் மேல்பத மடைந்திருப்பாகத் தெரிகிறது. இவ்வுண்மை வெளியாகிவிடுமோ வென்று அஞ்சி இடைக்காலத்தில் பிறப்பால் உயர் ஜாதி என்ற அகம்பாவக் கொள்கையை தழுவியவர்கள் "ரிஷி மூலம், நதிமூலம் விசாரிக்கக்கூடாது" என்று தடை உத்திரவு போட்டது போலும்! ஆகவே, பிராமணன் என்பவன் ஜாதிமத பேதமற்றவன்; எவ்வுயிரையும் தன்னுயிராகக் கருதுபவன், தான் பிரம்ம விசாரணை செய்வதோடு கீழ் கடையில் உள்ளவர்களைத் தன் நிலைக்குக் கொண்டுவர முயலுபவன்; தான் அடைந்த ஞானத்தின் பயனுக மக்களை அஞ்ஞானம், பஞ்சம், பிணி முதலான கஷ்டங்களிலிருந்து விடுவித்து நல்வழி காட்டுபவன்; சுருங்கச் சொல்லுமிடத்து பிரம்மத்தினிடமாக உண்டாகிய ஜீவ கோடிகளுக்குத் தொண்டுபுரிவதே பிராமணனின் தொழிலாக அமையும். அதனுல்தான் சமூகப் பிரிவினையில் வேறு எந்தத் தொழிலும் அவனுக்குக் கொடுபடவில்லை போலும். திருவள்ளுவ நாயனுர் கூறுவதும் இதுவே:

அந்தணரென்போ ரறவோர் மற்றெவ் வுயிர்க்
செந்தண்மை பூண்டொ ழுகலான். [கும்

சூத்திரன் ஞான முதிர்ச்சியால் பிராமண பதத்தை யடைவது பால் நெய்யாவதற்கு ஒப்பிட்டுச் சொன்னேம். நெய் பாலாகாததுபோல், சிருஷ்டிக் கிரமத்தில் புல் பூண்டாகி, அது குத்துச் செடியாகி, பிறகு செடியாகி, மரமாகி, ஓரறிவுயிர் ஈரறிவுயிர் இவைகளாகி, ஐயறிவுடன் குரங்கு வரையில் மிருகப் பிறவி வந்து, பிறகு குரங்கினிடமாக மனிதன் தோன்றினுனென்றுல், சிருஷ்டியின்கதி மேல்நோக்கிச் செல்லுகிறதே தவிர மனிதன் மறுபடியும் கீழ் நிலையடைந்து மிருகங்களாகப் பிறக்கலாமென்பது சிருஷ்டி இயற்கையிலேயே இல்லாத பாகமாகும். ஒரு ஜென்மத்தில் பாபம் செய்யும் மனிதன் அடுத்த ஜென்மத்தில் மிருகங்களாகப் பிறப்பானென்று புராணங்கள் கூறுவது சரியல்ல. இவ்விதக் கருத்துகளெல்லாம் நமது சாஸ்திரங்களில் பதுங்கிக் கிடக்கின்றன. அவைகளை வெளிப்படுத்தும்போது, புதுமையாகத் தோன்றுகிறது. இத்தகைய பழமையின் புதுமையையெல்லாம் நாம் உணர்ச்சியுடன் அறிய இந்த யுகம் முடியவேண்டுமா, இன்னம் ஒரு வருஷம் பிடிக்குமா? அறிவாளிகளே இக்கேள்விக்குப் பதில் சொல்லட்டும்.

மேற்கூறியவாறு புது யுகம் ஆரம்பித்தவுடனே இப்பொழுது பஞ்சாங்கத்திலுள்ள கந்தாய பலன்களெல்லாம் பருதி கண்ட பனிபோலோடும். விரயம் என்பதே ஒழிந்து எல்லாம் ஆதாயமாகவே காட்டும். 'எவரெவர்க்கும் நல்வாழ்வே உள்ளதய்யா' என்ற ஒரு பேச்சில் புதுயுக கந்தாய பலனை முடித்து விடலாம். முதல், நடு, கடை கந்தாயங்களின் பூஜ்யம் பூஜ்யமாகவே போகும். எங்கு பார்த்தாலும் இலக்ஷ்மீகரம், காரியானுகூலம், ஊக்கம், சற்சன சகாயம், தெய்வானுகூலம், பக்தி மேன்மை, சரீரசுகம், பூரண ஆயுள், மகிழ்ச்சி, விரும்பியவை சித்தி, நல்லோர் கூட்டம், தருமச் செய்கை இவைகளே நடமாடும். தேக மெலிவு, நோய், சஞ்சலம், காரியக்கேடு, வீண் பிரயாசம், பொருட் சேதம், கடன், பயம், தொழிற் கேடு இவைகளைப் பார்க்க முடியாது. மேலும் ஒவ்வொருவருடைய ஜென்ம நக்ஷத்திரத்தைக் கொண்டு கந்தாய பலன் அறியவேண்டுமென்ற நிர்ப்பந்தமும் அகலும். எல்லா நக்ஷத்திரங்களும் கோள்களும் யுகமாறுதலையொட்டித் தங்கள் குணங்களையும் மாற்றிக்கொண்டு மோக்ஷ ஸாதனத்துக்கு ஹேதுவாயுள்ள நற்பலன்களையே ஜீவராசிகள்மீது பாரபக்ஷமில்லாமல் அளவற்று வர்ஷிக்கும். "உருசி கண்ட பூனை உரியை உரியை தாவித்தாம்!" இப்பேர்பட்ட பவிஷ்ய புராணத்தின் ருசி நாக்கில் பட்டால் நாம் ஏன் இனி இப்படித் தூங்குவோம். நமது தூக்கத்தையே தூ(பரிசுத்தமான) ஊக்கமாக மாற்றிக்கொண்டு, ஆத்ம விசாரணை, பிரும்ம விசாரணை என்ற மோக்ஷ வழியில் சென்று ஆனந்தமட்டுமல்ல பிரும்மானந்தத்தையும் அடைவோமல்லவா!

## மோக்ஷமென்றால் என்ன?

பிறப்பு இறப்பு என்ற சுழலிலிருந்து விடுதலை யடைவது மோக்ஷம் என்று பலர் நினைக்கிறார்கள். ஆத்மா என்றும் அழியாத வஸ்து என்னுமிடத்தில் அது என்ன மோக்ஷத்தை விரும்பக் கூடும்? அது உடலை அண்டியிருக்கும் போது தன் சுதந்திர நிலையை மறந்து நிற்பது மாயை யென்றும் இந்த மாயா பாசத்தினின்றும் விடுதலை அடைய அது ஆசைப்படுகிறதென்றும் சொல்லுகிறார்கள். உடலில் இருந்து கொண்டே மேற்கூறிய பந்தங்களைக் கடந்து நிற்பது அதற்கு மோக்ஷமாகுமா? அல்லது உடலைவிட்டு விடுவது மோக்ஷமாகுமா? உடலைவிட்டு விடவேண்டுமென்றால் அதை முதலிலேயே எடுத்திருக்கவேண்டியதில்லையே. "உடலை விட்டால் உயிருக்கோர் பந்தமில்லை, உடலிருந்தால் உயிருக்கோர் மோக்ஷமில்லை" என்பது "பயித்தியம் தெளிந்தால் கலியாணமாகும், கலியாணமானால் பயித்தியம் தெளியும்" என்ற சுற்றுப் பேச்சுபோல் தோன்றுகிறதே! உடல் அழியாமலே உயிர் மாயையை ஜெயித்து நிற்பது மோக்ஷ மென்றால், அர்த்தமுண்டு. "'ஊழிகாலமான போதும் யோகி சாவதில்லையே', 'காயமழிந்த பின் யோகமில்லை, ஞானமில்லை', 'நிலையில்லாக் காயமென்ற நினைவுமுண்டு, நிலைக்க வைக்க மார்க்கமொன்று நீயே தந்து'" என்றெல்லாம் நமது சித்தர்கள் பாடியிருக்கிறார்கள். பகவத்கீதையில்(7-வது அத்தியாயத்தில் கடைசிக்கு முன் சுலோகத்தில்) "ஜராமரண மோக்ஷாய" என்று சொல்லப்பட்டதிலிருந்து ஜரை (கிழத்தனம்), மரணம் (சாதல்) இவ்விரு அவஸ்தைகளிலிருந்து விடுதலை பெருவதே மோக்ஷம் என்பது கிருஷ்ண பகவானுடைய கருத்தென்று நன்கு விளங்குகிறது. கிழத்தனம், சாதல் என்கிற கஷ்டங்கள் ஆத்மாவிற்கு ஒரு காலுமில்லையே. ஸ்தூல உடலுக்கல்லவோ இவ்விரு கஷ்டங்கள் இயற்கையில் உளது. ஆதலால் உடலுக்கு உயிர் வேண்டும், உயிருக்கு உடலுடன் சாஸ்வதமாகவும் கிழத்தனமின்றியும் இருத்தல் வேண்டுமென்ற கருத்தே மோக்ஷத்தின் பொருளாகத் தோன்றுகிறது.

இயற்கையை ஒட்டிக் கவனித்தாலும் இம்முடிவிற்கே வருகிறோம். ஒருவன்

இறந்துவிட்டால், சாதாரணப் பேச்சில் "தவறி விட்டான்" என்று சொல்வதுண்டு. அவன் தன் வாழ்நாளில் என்ன செய்து முடித்திருக்கவேண்டுமோ அதை செய்து முடிக்கத் தவறி விட்டான் போலும். சிருஷ்டி தருமம் புழுமுதல் அப்போதைக்கப்போது ஏற்படும் குறைகளை நிவர்த்தித்துக்கொள்ளும் ரீதியில் மேல்மேல் விருத்தியுற்று மனிதப்பிறவி வரையில் வந்துவிட்டது. மனிதனுக்குப் பின் சிருஷ்டியின் கதி என்ன? அது ஒரு பூர்த்தியான பதத்தை யடையும் வரையில் அதற்கு ஓய்வே கிடையாது. "செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாமென்றே எண்ணியிருப்பர் பித்த மனிதர்" என்று பாரதியார் கூறியது போல் இறந்தவன் மறுபடியும் பிறவிக்கு வந்துதானாக வேண்டும். மனிதன் மற்ற பிறவிகளைக் காட்டிலும் சிறந்து விளங்குகிறான். ஆனால் அவனுக்கும் குறைகளிருக்கின்றன. அவற்றை நீக்கிக்கொள்ள முயலாது இறப்பதே மனிதன் செய்த தவறு. எக்குறையும் நீங்கி மனிதன் அழியா உடலைப்பெற்றுச் சுதந்திரத்துடன் சாஸ்வதமாய் இம்மண்ணுலகிலேயே வாழ்வது தான் மோக்ஷம். அப்பொழுது தான் சிருஷ்டி தருமமும் ஒரு பூர்த்தியை யடையும்; காலச்சக்கிரமும் சுழலாது நிற்கும். அக்காலமும் நெருங்கிவிட்டது.

யோக வழியாகப் பார்த்தாலும், சகல ரிஷிகளும் ஏதோ நிர்வாண பதத்தை குண்டலினி அம்ஸத்தால் அடைந்து விட்டதாகச் சொல்லுகிறார்களே யொழிய, அவர்கள் பிற ஜென்மாவை அனுசரித்துக்கொண்டு மனித வர்க்கத்துக்கு வருவதுடன் முன் ஜென்மாவின் ஞாபகத்தைக்கூட மூட்டை கட்டி எங்கேயோ வைத்துவிட்டுத்தான் பிறக்கவேண்டி யிருக்கிறதென்று தெரிகிறது அவர்கள் ஸ்தூலத்துடன் இருக்கும்போது, சூக்ஷ்ம கோசத்துக்குள் சமாதி யென்று இருந்து எழுந்திருப்பவர்களாய் இருந்தால் ஒன்றரை அல்லது இரண்டு தடையை (ஸுஷும்னுவுக்குள் முள்ளந்தண்டுக்குள் ஏற்பட்ட தடையை) விலக்கிக்கொண்டு அனேக நிர்வாண சித்திகளின் சக்திகளை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ள முடிந்தது. ஆதலால் ஸம்யாமா என்கிற கோர்வைக்குள் ஏற்பட்டு வந்த ரிஷிவர்க்கங்களே ஒழிய குண்டலினியின் ப்ரகடன முழு பரிணமிப்பை அறிந்து மோக்ஷமடைந்தவர்களல்ல. திருமூர்த்தி அம்ஸங்களுக்கே குண்டலினியின் உள்பாவனை அறியாமை, பரிக்ஷார்த்தமாய் சிருஷ்டியே நடக்கிற தருணத்தில் யாதொரு அம்ஸங்களும் — பரப்பிரம்மங்களும், நிர்குணப் பிரம்மங்களும், ஸர்வக்ஞான பிரம்மங்களும்—மோக்ஷ மடையவில்லை என்பதற்கு ஆக்ஷேபம் உண்டோ? இதுவரை மோக்ஷம் என்ற சப்தத்துக்கே அர்த்தம் உண்டாகவில்லை. இனி நாம் அறியவேண்டியது என்ன? மோக்ஷமென்ற பாவனை குண்டலினியின் முழு உள் பிரகடனைக்குள் பரிணமித்து யாவற்றைய சங்கங்களுக்குள் இசைந்து வெளிப்படையாய் தீர்மானித்து வருவதேயாகும். அவ்விதம் எத்தடைகளையும் ஒன்று கூடவிடாமல் முற்றிலும் ஜெயித்து வந்த வஸ்துவுக்குத் தான் மோக்ஷமடைந்த பிரகிருதி என்ற பட்டம் தரும். சில தடைகளைமட்டும் அகற்றிய காரணத்தால் மோக்ஷமடைந்து விட்டதாகச் சொல்லுவது அவ்வளவு நேர்த்தியல்ல. மனிதவுடல் அழியாமல் நிற்கும் வரையில், சிருஷ்டி ஆரம்பித்தது முதல் நாளைய தேதிவரையில் உள்ள பிரகிருதிகளெல்லாம், எவ்வளவு சக்திகள் வாய்ந்தனவாயிருந்த போதிலும், மூடப் பிரகிருதிகளென்றே நாம் கருதவேண்டும்.

ஞானபாகத்தை யொட்டி ஆராயுங்கால் நமது தீர்மானத்தை ஔவையாரும் சுட்டிக் காட்டுவதாகத் தோன்றுகிறது:

"உடம்பினால் ஆனபயன் ஆவதெல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண்"

பக்தி மார்க்கத்தை ஒட்டிப் பார்த்தாலும், நம்மாழ்வார் பாசுரங்களால்

நாம் சொல்வது சரியென்று விளங்கும். பகவான் பிறப்பையும் இறப்பையும் போக்குவதெவ்வாறு? இந்த ஜென்மத்திலேயே பிணிகளையும் மூப்பு அல்லது கிழத்தனத்தையும் போக்குவதன்றோ:

"ஓயும் மூப்புப் பிறப்(பு) இறப்புப்பிணி
வீயுமாறு—செய்வான் திருவேங்கடத்(து)
ஆயன், நாள் மலராம் அடித்தாமரை
வாயுள் ளும்மனத்துள்ளும்வைப்பார்கட்கே"

துவாபரம் என்கிற இத்தகைய மோக்ஷசாதனத்தை உலகத்தோர் நன்குணர வரும் தாருண வருஷம் மாசி மாதம் முதல் தேதியே ஆரம்ப காலம் என்ற நற்செய்தியைக் கேட்ட மாத்திரத்திலே 'இன்பத்தேன்வந்து பாயுது காதினிலே' அல்லவா!

## புதுமனுவும் புதுகல்பமும்

கலியுகம் மாறுவதுடன் மனுவும் கல்பமும் மாறப்போகிறது. இப்பொழுது நடக்கும் சுவேதவராக கல்பம் போய் பிரம்ம கல்பம் ஆரம்பிக்கும். சுவேதவராகம் என்றால் வெள்ளைப் பன்றி. இதன் குணம் கிழங்கைத் தின்று ஒன்றையும் வளரவிடாமல் அழிப்பதே. இதன் ஆட்சி முடிந்து பிரம்மமே ஆட்சிக்கு வருவதென்றால் இனி நமக்கு நற்பலன் உண்டா என்று சந்தேகிக்க இடமே இல்லை. பூர்ண சுதந்திரமும் குறையற்ற வாழ்வும் மனிதனுக்கு உண்டென்று ஆதியிலே அவன் தலையில் பிரமன் எழுத்தாணி கொண்டு எழுதியிருந்த போதிலும் இந்த உண்மை மூன்று பிரமாக்களும் அவர்கள் சிருஷ்டி வியாபகங்களும் முடிந்து அழிந்து, நாலாம் பிரமன் வேலை செய்யுங்கால் இருபத்தேழு *சதுர்யுகங்களும் கடந்து இருபத்தெட்டாம் சதுர்யுகத்தின் முதல் யுகமாகிய இந்த கலியுகத்திலும் 5045 வருஷங்கள் சென்றபின் அன்றோ வெளியாகிறது. காலசக்கிரம் இது வரையில் சுற்றியபடி இனிமேலும் சுற்றுமானல் கலியுகத்துக்கு 4,32,000 வருஷம் கொடுக்கவேண்டும். ஆனால் பிரம்ம சங்கல்பத்தால், நாலாம் பிரமாவின் இருபத்தெட்டாம் சதுர்யுக ஆரம்பத்தில் கலியுகம் 5046 வருஷம் ஆன உடனே கல்பம்மாறவேண்டுமென்றிருந்ததால், இப்பொழுது நடக்கும்கலி அகால மரணத்தை அடைகிறது போலும். இக்காரணத்தை ஒட்டியே கிருத, திரேத, துவாபர, கலி என்ற வரிசைக்குக் காரணமாய் நிற்கும் கொள்கையையும் மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இப்பொழுதுள்ள பஞ்சாங்கப்படி, சதுர்யுகம் 1000 கழிந்தால் பிரமனுக்கு ஒரு பகல், பின்னும் ஓர் 1000 கழிந்தால் பிரமனுக்கு ஓரிரவு. இப்படி 360 பகலிரவுகள் கழிந்தால் பிரமனுக்கு ஓர் வருடம். இவ்வருடம் நூறு சென்றால் பிரமனுடைய ஆயுள் முடியும். (இவ்விதம் 3 பிரமாக்கள் ஆயுள் முடிந்து 4-ஆம் பிரமா ஆட்சி புரிவதாக நாம் முன் சொன்னதை ஞாபகப்படுத்திக் கொண்டால், இந்த சிருஷ்டி தருமமே சுமார் எவ்வளவு வருடங்களுக்குமுன் ஆரம்பித்திருக்க வேண்டுமென்ற சங்கை கிடைக்கும். இச்சிருஷ்டி தர்மம் ஆரம்பிக்குமுன் என்ன நடந்தது? அதன் கால அளவு என்ன என்று ஆராய்ச்சி செய்யப் புராணங்களில் அத்தாட்சி கிடைக்காமல் போனாலும் இப்பொழுது நடந்தேறும் சிருஷ்டி தர்மத்தையாவது நாம் கணக்கிட்டுப் பார்ப்பது அசாத்யமல்ல) ஒரு பிரமாவின் ஆயுளின் முற்பாதியாகிய 50 வருடம் பாத்ம கல்பமென்றும் பிற்பாதியாகிய 50 வருடம் வராக கல்பமென்றும் சொல்லப்படும். இப்போது நடக்கும் வராக கல்பத்தை சுவேதவராக கல்பமென்றும் அடுத்த வருஷம் வரப்போகும் பாத்ம கல்பத்தை பிரம்ம கல்பமென்றும் சொல்ல வேண்டும். ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள் இப்பொழுது நடக்கும் "சுவேதவராக கல்பே, வைவஸ்வத மன்வந்தரே" என்ற சங்கல்பத்தை மாற்றி "பிரும்ம கல்பே, சூரிய சாவர்ணி மன்வந்தரே" என்று உச்சரிக்கத் தக்க தருணம் வந்தபோது உத்திரவு கொடுப்பார் என்பதுதான் நமது நம்பிக்கை.

பிரமனது ஒரு பகற் காலத்தில் 14 மனுக்கள் அரசு செய்வர். சிருஷ்டி ஆரம்பக் காலத்திலே பூமி பரிபாலனம் செய்யுமாறு தெய்வ ஆக்ஞையால் இவர்கள் பிறந்தார்களாம். சுயாம்புவன், சுவாரோஷிதன், உத்தமன், தாமசன், ரைவதன், சாக்ஷுசன், வைவசுதன், சூரிய சாவர்ணி, தக்ஷசாவர்ணி, பிரஹ்மா சாவர்ணி, ருத்திரசாவர்ணி, தர்மசாவர்ணி, ரௌசியன், பௌசியன் - என்ற இந்த 14 மனுக்களை அவரவர்கள் காலங்களில் மனித வர்க்கத்தை நடத்துபவர்களாதலின், அவர்களை மனுஷருக்கு மூல தாதாக்களென்பர். இப்பொழுதுள்ள சிருஷ்டிக்கு மூலதாதா வைவசுதமனு (அந்தகன், சனி). அடுத்த வருஷத்தில் அவன் மாறி, சூரியசாவர்ணி என்ற புது மனு வேலைக்கு வருவான். இந்த எட்டாம் மனு சூரியனுக்குச் சாயாதேவியிடத்துப் பிறந்த புத்திரன். இப்பொழுது நடப்பது ஏழாம் மன் வந்தரம். ஒரு மன்வந்தர காலம் 4,32,000 மனுஷ்ய வருடம். மன்வந்தரமொன்றில் தேவேந்திரன் சப்த ரிஷிகள் முதலியோர் பிறந்திருப்பார்கள். சூரிய சாவர்ணி மனு ஆளுங்கால் தீப்திமான், காலவன், ராமன், கிருபன், அசுவத்தாமன், வியாசன், சிருங்கன் என்பவர்களே சப்த ரிஷிகளாவர். மேலும் பாதாளத்தில் தவம் செய்திருப்பவனாகிய பலிச் சக்கிரவர்த்தியே தேவேந்திர பதம் பெறுவான். பிரமனுக்கு இரவாகும் போது பிரளயமுண்டாகும். அந்தப் பிரளயத்தில் த்ரிலோகங்களும் அழிந்தொழிய மகா லோகவாசிகள் ஜன லோகம் சேர்வார்களாம். வரப்போகும் மன் வந்தரத்தில் சர்வரீவான், விரஜன், நிர்மோகன் முதலியோர் பூலோக மானுஷியவர்காதிபராவார்களாம். அடுத்த வருஷம் ஜலப் பிரளயமின்றியும் பூலோகம் அழியாமலும், யுகம், மனு, கல்பம் இவைகள் மாறப் போவதால், இதைக் குற்றமில்லாப் பிரளயம் என்று சொல்லலாம். ஆனால் ஜலப் பிரளயம் வந்து இப்பொழுது நடக்கும் சண்டை, பஞ்சம், இவற்றைக் காட்டிலும் அதிகச் சேதம் செய்யவும் முடியுமோ!

கிருத யுகத்தில் தர்மதேவதை நான்கு பாதத்தாலும், திரேதா யுகத்தில் மூன்று பாதத்தாலும், துவாபர யுகத்தில் இரண்டு பாதத்தாலும், கலியுகத்தில் ஒரு பாதத்தாலும் நடக்குமென்று சொல்லிக் கிருதயுகத்தை முதலாகவும் கலியுகத்தைக் கடையாகவும் கொள்கிறார்கள். ஆனால் இது தலைகீழ் வாய்பாடு என்று நாம் முன்னமேயே எடுத்துக் காட்டிவிட்டோம். கலி (1), துவாபரம் (2), திரேதா (3), கிருத (4) என்கிற ஆரோஹணம் சிருஷ்டி இயற்கையின் முற்போக்கை அனுசரித்து நிற்கிறது. 4, 3, 2, 1 என்கிற அவரோஹணம் அவ்வளவு பொருத்தமாக இல்லை. ஒவ்வொரு யுகத்தின் கால அளவை நோக்குங்கால் கலி ஒரு பங்கு (4,32,000 வருஷ) துவாபரம் இரண்டு பங்கு, திரேதா மூன்று பங்கு, கிருத நாலுபங்கு, இவ்விதந்தான் இருக்கிறது. மேலும் நான்கு யுகங்களின் பெயர்களில் திரேதா என்பது மூன்று என பொருள்படும். துவா என்பது இரண்டு என பொருள்படும். இதிலிருந்து மூன்றிற்குமேல் கிருதம் நான்கு எனவும் இரண்டிற்குப் பின் கலி ஒன்றெனவும் பொருள்படுகிறதல்லவா? யுகங்களின் பெயர்களிலேயே முதலாவது கலி என்றும் நான்காவது கிருதம் என்றும் அடங்கியிருக்கிறது. இதனால் முதல் யுகமாகிய கலி முடிந்தால் அடுத்த யுகம் துவாபரம் தானே பிறக்கும்!

மேற்கண்ட யுகங்களின் வரிசையை ஆரோஹணக் கிரமத்தில்தான் படிக்க வேண்டுமென்பதற்கு ஒரு தத்வ சாஸ்திர நியாயம் உண்டு. கிருதம் என்றால் சிருஷ்டித்தல். சிருஷ்டி காலத்தில் மனிதனிடமிருக்கும் ஏழு ஆதாரங்களில் (மஹாபர நிர்வாணம், பர நிர்வாணம், நிர்வாணம், புத்தி, மனஸ், சூக்ஷமம், ஸ்தூலம்) என்பனவைகளில் கடைசியாய்ச் சொல்லப்பட்ட நான்கு ஆதாரங்களும் ஒத்துழைக்கின்றன. திரிதம் என்றால் திரிதல். அவ்வுழைப்பின்

காரணமாக மிகுதியுள்ள மூன்று ஆதாரங்களும் மஹாபரம், பரம், நிர்வாணம் என்று திரிகின்றது. அதாவது விருத்தமானது ரஹிதம் செய்யப்பட்டு தாரகமாகிறது. துவா என்றால் இரண்டு - சக்தி, சிவம். மேற்சொன்ன விதம் தாரகமாய் வந்து சக்தி சிவம் என்ற இரண்டினுள் கலந்து உடல் கட்டப்படுகிறது. கலி என்றால் ஆசை. சிருஷ்டி தர்மத்திற்கே காரணம் குறைவற்ற பரிபூரண பக்குவத்தில் தன்னைத் தானே சமைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசையேயாகையால் அப்படிக் கட்டப்பட்ட உடல் பூமிக்கு வந்ததும் அதனுள் அவ்வாசையெனும் உயிர் புகுந்து அதனை இயக்குகிறது. இதுவே தற்கால சிருஷ்டி முறை. கலியென்ற இச்சையே சிருஷ்டிக்குங் காரணமா யிருப்பதால், அவ்விச்சையைக்கொண்டு மற்றொன்றினுடைய உதவியின்றித் தனக்குள்ளிருக்கும் சக்தி சிவம் என்ற இரண்டினுள் புகுத்தி, திரித்து, கிருதம் செய்வதே "இச்சா மாத்திரம் பிரபோ சிருஷ்டி" என்ற ஞான பாகத்தைத் தெரிந்து கொள்ளும் நேரடியான பாகமாகும். வரப்போகும் குற்றமில்லாப் பிரளயத்தின் பயனாக இவ்விதப் பரிபூரண சிருஷ்டி ஞானம் நமக்குக் கிடைத்து தற்சமயமுள்ள 64 கலைகளையும் ஓரே கலையில் அறியவல்ல ஏகலைவனாக ஆகிவிடுவோமென்று ஊதாது சங்கே!

## கற்பகப் பளிங்கு

இத்தகைய பிரம்மஞானத்தை உலகிற்கு முதல் முதலாக சூரிய மண்டலத்திற்கப்பால் நின்று வரும் பளிங்கன் என்ற கற்பகம் அல்லது தூமகேது தாருண வருஷம் கலியுகம் முடிவதற்கு முன் தோன்றி அளிக்கும். சாதாரணமாக தூமகேதுவைக் கண்டால் அரசனுக்காகாது, குடிகளுக்காகாது என்ற மூடத் தோற்றங்களைக்கொண்டு பாமர ஜனங்கள் பயப்படுவது வழக்கம். காக்காய் உட்கார பனம்பழம் விழுந்தது என்ற நியாயத்தையொட்டி 1910ல் தோன்றிய ஹாலீஸ் காமெட் இங்கிலாந்தின் அரசனான ஏழாம் எட்வர்டை கொன்றது என்று நினைப்பார் பலர். மும்மூர்த்திகளும் நவக்கிரகங்களும் நடத்திவரும் ஆட்சிமுறையில் உள்ள குறைபாடுகளைச் சீர்திருத்தவே பிரமத்தின் தூதுவாக காமெட் வருகிறதென்பதுதான் பரம ரகசியம். எல்லா காமெட்டுகளுக்கும் பூமியைத் தொடக்கூடிய அளவு வால் நீள்வதில்லை. ஒரு காமெட்டின் வால் பூமியைத் தொட்டால் எவ்வளவோ ஆவிச்சத்துக்கள் கொட்டப்பட்டு அதன் பயனாக நூதன அறிவுகள் மனிதனுக்குக் காலக்கிரமேண உண்டாகின்றன. ஹாலீஸ் காமெட்டின் வால் பூமியைத் தொட்ட பிறகு 30வருஷங்களில் எவ்வளவு விதங்களாக மனித அறிவு வளர்ந்திருக்கிறதென்பது உலகப் பிரசித்தம். தாருண வருஷத்தில் தோன்றும் காமெட் வால் நீண்டு பூமியைத் தொட்டு அழியா உடலைக் கொடுக்கவல்ல பிரம்ம ஞானத்தை மனிதனுக்கு ஊட்டும். அதன் பயனாகத்தான் இவ்வளவு சீக்கிரம் யுகம், மனு, கல்பம் இவைகள் மாற முடிகிறது. அம்மாறுதல்கள் நடப்பதற்கு முன்பாகவே உலகச்சண்டை முடிந்து அமைதி ஏற்படும். எல்லா உயிரும் ஒன்றே என்ற ஞான அன்பு உலகமெல்லாம் பரவி 1948-ஆம் வருஷத்திற்குள் மனித சமுதாயத்தில் எவ்விதத் துவேஷமு மில்லாமல் செய்து அஹிம்ஸா தருமம் நிலைபெறும். அப்பொழுது வேதத்தின் பாகமாகிய புருஷ சூக்தத்தில் சொன்னபடி, விஷ்ணுவின் ஸ்தூல விக்ரகமாக விளங்கும் மனிதன் அமரனாகி இம்மண்ணுலகிலேயே வாழ முடியும். (அமிருத - சாகாமல், இஹ - இங்கே, பவதி - இருப்பாயாக).

பளிங்கன் என்றால் சுக்கிரனுக்கும் பெயர். வரப்போகும் காமெட்டுக்கு சுக்ரகாமெட் என்ற பெயர் மிகப் பொருத்தமானது. ஏனெனில், சுக்ரனின் எண் 2520 (இதை 1 முதல் 9 வரையில் உள்ள அஸ்திவார எண்கள் மிச்சமில்லாமல் வகுக்கும்) பளிங்கன் காமெட் 2520 வருஷத்திற்கு ஒரு தடவை தோன்றும். இந்தக் கலியுகம்

பிறந்தபோது அது தோன்றி குண்டலி யின் வெளிப்போர்வையாகிய சிவன் (அல்லது சீவன்) என்கிற உயிர் ஞானத் தைக் கொடுக்கவே உலகெலாம் ஆத்ம விசாரம் அதிகரித்தது. புத்தன் காலத் தில் அது மறுபடியும் தோன்றிக் குண் டலியின் நடுப்போர்வையான விஷ்ணு என்ற ஸ்தூல ஞானத்தைக் கொடுக் கவே உலகெலாம் உடல் விசாரம் வளர்ந் தது. அடுத்த தமிழ் வருஷம் மூன்றாந் தடவை அது தோன்றிக் குண்டலி யின் உள் போர்வையான பிரும்ம ஞானத்தைக் கொடுத்து உலகெலாம் சிருஷ்டி விசாரத்தைப் பரப்பும். தேவாசுர கதையில் அசுர குருவான சுக்கிராச்சாரியாரிடம் ஜீவ மந்திரம் இருப்பதாகவும், செத்தவனைப் பிழைக்க வைக்கும் சக்தி அம்மந்திரத்திற்கே உள்ளதென்றும் சொல்லப்பட்டிருக் கிறது. 1942-ஆம் ஸ்ரீ டிஸம்பர்மீ மேற்கண்ட காமெட் தோன்றி வாலை நீட்டுவதற்குமுன் தேவ குருவால் பின் இழுபட்டு சப்தரிஷி மண்டலத்தில் சற்று ஓடி மறைந்தது. 1943-ஆம் ஸ்ரீ ஸெப்டம்பர்மீ 10-ந்தேதி தூர திருஷ்டிக் கண்ணாடிக்கு அது மறுபடி யும் தென்பட்டது. 1944-ஆம் டிஸம்பர் மாதத்திற்குள் அது ஸ்தூல கண் களுக்கே உலகெலாம் தோன்றி வால் நீட்டி பூமியைத் தொடும் அற்புதக் காட்சியை நாம் நிச்சயமாகப் பார்க்க லாம். "புலி வருகிற"தென்று மூன் றாம் தடவை சொல்லுகிறோம். ஆகை யால் இப்போது புலி வந்தே தீரும் அல்லவா! சுக்கிரன்தான் அந்த காமெட்டை முன் இழுத்து நமது தோற்றத்திற்குக் கொண்டுவருகிறான். ஏன்? அதன் வாயிலாக அளவற்ற உயிரை உலகத்திற்குக் கொடுத்து சிருஷ்டி தருமத்தை ஒரு பூர்த்திக்குக் கொண்டு வருவதற்காக. கற்பக விரு க்ஷம் கேட்டதையெல்லாம் தரும் என் பதைப்போல் அந்தக்கற்பகப்பளிங்கும் மனிதனுடைய எக்குறைகளையும் நீக் கும். ஆகையால் அதை துவேஷிக்கா மல் நாம் பிரார்த்தித்து ஜென்மசாபல்ய மடைவதுவே புத்திசாலித்தனமாகும். பிரும்மமே சோதி சொரூபமாய் வரு கிறதென்றும் அந்தக் காமெட்டைக் கரு தலாம். அப்பளிங்கின் தோற்றம் பிரம்ம கல்பத்தை ஆரம்பிக்க வரும் தூது.

அது தோன்றிய பிறகு உலகத்தில் பல மாறுதல்கள் உண்டாகும். உதாரண மாக 14 கிரகங்கள் உலகத்தை நடத் தும். இப்பொழுதுள்ள நவக்கிரகங் களும், கண்டகன் (யுரேனஸ்), சமரசன் (நெப்டியூன்), பிரம்மசூரி (புளூடோ) ஆகிய 12 கோள்கள் தெரிகின்றன. புதி தாக 2 கோள்கள் கண்டுபிடிக்கப்படும். க்ரீக் தேசத்துப் புராணங்களில் புளூடோ என்றால் நரகாதிபதி. அந்த கிரகம் ஒரு இராசியில் சுமார் 32 வரு ஷங்கள் சஞ்சாரம் செய்யும். சாமுத் திரிகா லக்ஷணங்கள் 32ஐயும் ஏக காலத் தில் கெடுக்கவல்ல பெரிய அம்மை அல் லது பிரம்மசூரி என்ற பெயரை நமது முன்னோர்கள் அந்த கிரகத்திற்கு அளித்திருக்கிறார்கள். அதை விராட் என்றும் சொல்லலாம். அது ஆயில்யம் (குண்டலினி-அரவுநாள்) என்ற நக்ஷத் திரத்தில் 1944-ஆம் ஸ்ரீ மார்ச்சு மாதத்திற்குப் பிறகு அது சஞ்சரிக் கும். அப்பொழுது அது பணிந்து (பணி என்றால் பாம்பல்லவா!) இது வரையில் தடுக்கப்பட்டிருந்த உயர் ஞானம் பூமிக்கு வந்து சேரச் சம்ம திக்கும். அதற்குப் பிறகுதான் திரவா திரை திறந்து ஆருத்திரா தரிசனம் உண்மையில் நமக்குக் கிடைக்கும். சிதம்பர ரகசியமும் புரியும். நடராஜன் ஒரு காலைத்தூக்கி தாண்டவம் ஆடிய எண்ணமும் கைகூடும். மேலும் இந் தியாவுக்கும் சிம்மளத் தீவுக்கும் தரைப் பாதை உண்டாகும். பல புதிய பூமி கள் உண்டாகும். பல நக்ஷத்திரங்கள் தோன்றும், சிதறும். குழந்தைகள் பூர்வ ஜென்ம ஞானத்துடன் பிறக்கும். எவ்வளவு ஜென்மாக்கள் எடுக்கலாமோ அவ்வளவும் எடுத்துப்பிறப்பில் மோக்ஷ மற்று நட்சத்திரங்களாய் நிற்கும் ஷிராத் என்கிற பிதுர்கள்கூட பூலோக சுவர்க்கத்தைப் பார்த்துப் பிறப்பில்

மோஹமடைந்து மனித உடலை எடுத்துக்கொள்வார்கள்.

## பிரம்மமே ஜேயம்

இப்பொழுது நடக்கும் மஹாயுத்தம் ஆரம்பித்த பிறகு வெற்றியைச் சுட்டிக் காட்டும் "வி" ("V" for Victory) என்ற ஆங்கில ஸப்தம் உலகமெங்கும் பரவி நிற்கிறது. "V" என்கிற ஆங்கில எழுத்து "விக்டரி" (அதாவது ஜயம்) என்கிற ஆங்கில வார்த்தையின் முதலெழுத்தாக விளங்குகிறது. அவ்வெழுத்தே ஆங்கிலத்தில் நாம் (We) என்கிற பொருளையும் நாத சொரூபமாய் விளக்கிக் காட்டுகிறது. மேலும் இரண்டு ஒன்றுகள் சேர்ந்தால்தான் "V" என்று எழுத முடியுமாகையால், சக்தியும் சிவமும் சேர்ந்து எக்காலத்தும் எச்சந்தர்ப்பத்திலேயும் இரண்டாகவே இருக்கும். ஒன்றை (ஏக பிரம்மத்தை) அவ்வெழுத்துத் தொக்கி வைத்துக்கொண்டிருப்பது போலும். சண்டை முத்த முத்த வெற்றி யாருக்கென்ற கேள்வி பலப்படுகிறது. தற்சமயம் கோடிக்கணக்கான ஜனங்கள் பூச்சிகளைப்போல் மடியும் பரிதாபக் காட்சியை நோக்குங்கால் "யமனே ஜெயம்" என்று சொல்லவும் கூடும். ஆனல் நாதனற்ற உலகம் இது அல்ல என்று நம்பிக்கிடக்கும் ஆஸ்திகர்கள் "சத்யமே ஜயம்" "தர்மமே ஜயம்" என்று இன்னமும் நினைக்கிறார்கள். பலர் "ஜனமே ஜயம்", குடிகளின் முன்னேற்றத்தை நாடும் ஜனநாயகக் கட்சியே வெற்றியடையும் (வெற்றியடையவேண்டும்) என்று கோருகிறார்கள். பூகோளப் படத்தில் இந்தியாவின் அமைப்பை உற்று நோக்கினல் கன்யாகுமரி என்கிற நுனியிலிருந்து இரண்டு ஒன்றுகள் கிளம்பி "V" யாகிய எழுத்தைப் போட்டுக் கொள்வதுபோல் ஒரு தோற்றம் உண்டாகிறது. கல்பகோடி வருஷங்களாய் சத்தியத்தையும் தர்மத்தையும் நிலைநாட்டுவதற்காக ஹரிச்சந்திரன், கிருஷ்ணபகவான் முதலிய பெரியோர்களைப் பெற்றுவளர்த்த பாரதத் தாய்க்கு வெற்றியுண்டா என்ற கேள்வி தடுக்க முடியாமல் வெளிக் கிளம்புகிறது.

ஆனல் மேற்கண்ட மாறுதல்களைக் கவனிக்குங்கால், யார் ஜயமடைந்தாலும் சரி, பிரும்மம் வெற்றியடையுமென்பதைப்பற்றி எள்ளளவும் சந்தேகமில்லை. குழந்தை தாயாரை சகஜமாகத் தெரிந்துகொள்ளும். தகப்பனைத் தாயினல் காட்டப்பட்டு அறிந்துக்கொள்ளும். தாயும் தகப்பனும் குழந்தைக்கு வித்தை கற்பிக்கக் குருவைக் காட்டுவார்கள். அக்குருவினல் கற்பித்த வித்தை தெய்வத்தைக் காட்டும். தெய்வத்தினின்று மோக்ஷமடையலாம். ஆதலால் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் மாதாவைப் பிரதானமாக வைத்தார்கள். ஆனல் அதுவும் ஒரு தலை கீழ்பாடம் என்று சொல்லுவதற்கு இடம் ஏற்பட்டுவிட்டது. எல்லா மாதாக்களுக்கும் பிதாக்களுக்கும் பிதாவாக விளங்கும் பிரம்மமே உலகத்துதித்து மக்களுக்கு ஸாஸ்வத உடலையும் சுதந்திர உயிரையும் கொடுக்கப் போகும் காலம் வெகு தூரமல்ல. அப்பேர்ப்பட்ட பிரம்மஞானமடைந்த மஹான்களுக்கு மேற்கூறிய நான்கும் ஒருவரைத்தான் குறிக்கும். நடமாடும் கோயிலெனும் இவ்வுடலுக்கு சாஸ்வதம் அளிக்கப் பிரம்மமே நமக்குக் குருவாக ஞானத்தையூட்டி, அக்குருவே பிதாவாக ரக்ஷித்து, அப்பிதாவே மாதாவாக சக்தியூட்டுமென்றல், தெய்வமே குரு, பிதா, மாதாவாகுமன்றே? அப்பேர்ப்பட்ட குருவுக்குத்தான் "ஜகத் குரு" என்ற பட்டம் தகும்.

எந்த மனிதனுக்கும் இறப்பதில் சுயமான ஆசையில்லை. அறிந்தோ அறியாமலோ சாஸ்வதமாக இருக்கப் போவதாகத்தான் நினைத்து நாம் வீடுகட்டுகிறோம், பணம் சேர்க்கிறோம், வித்தைக் கற்றுக்கொள்ளுகிறோம். அதுவே உடலுக்குள்ளிருக்கும் உயிரினது ஆசை. நமது உயிரின் ஆசையையொட்டி மனத்தைச் செலுத்துவோமானல், மனித குறைகளெல்லாம் நீங்கும், விதியும் விலகும். தற்கால உல

கில் அவசரமதிகம். பரபரப்பினால் உயிரின் ஆசையை உள்ளபடி அறியாமல் வாழ்நாளை வீணாளாகக் கழிக்கிறோம். அவசரம் எதற்காக? சீக்கிரம் சவக்குழியை அடைவதற்காகவா? இல்லை, இல்லை. தன்னிலை அடைந்த எந்த யுவனும் யுவதியும் யோகமார்க்கத்தில் பழகலாம். இல்வாழ்க்கையையோ, உலக இன்பங்களையோ, வயிற்றுப் பிழைப்புக்காகச் செய்ய வேண்டியதில்லை. காட்டுக்கும் போகவேண்டாம். காஷாயவேஷமும் தரிக்கவேண்டாம். ஆசனங்களையும் போட்டு உடலைத் துன்புறுத்தவும் வேண்டாம். காலையிலும் மாலையிலும் ஐந்து, பத்து நிமிஷங்கள் சௌகரியமாய் உட்கார்ந்தோ, படுத்தோ நமது மனத்தைத் திரியவிடாமல் உடலுக்குள் நடக்கும் சூக்ஷ்மமான கதிகளில் கவனத்தைச் செலுத்தி மோக்ஷமென்ற பதத்தின் பொருளை நன்குணர்ந்து பொருமையுடனும் ஊக்கத்துடனும் யூகித்து வருவதே யோகமாகும். இந்த சுலபமான அப்பியாசம் காலக்கிரமத்தில் சர்வ ஞானத்தையும் அளிக்கும். இதுவே நம்மை நாம் அறிவதற்கேற்ற வழி. இவ்வழியை மனிதர்களனைவருக்கும் காட்டிக் கொடுப்பதற்காகவே கற்பகப்பளிங்கு வந்துக்கொண்டிருக்கிறது. அது தோன்றும் தருணமும் தாருணமே. இத்தகைய சந்தர்ப்பத்தில் நாம் இப்பொழுதிருந்தே பிரம்மத்தின் வெற்றியை நாடி நிற்பது அவசரமாகுமோ! 'பிரும்மமே ஜயம்' ஊதாது சங்கே!

---


# The Vanguard Insurance Company Ltd.

9-9 A., Blacker's Road, Mount Road, Madras

## POINTERS OF PROGRESS

- Lowest Expense Ratio
- Highest Bonus Possibilities
- Cent per cent Security to Policy-holders
- Excellent terms to Field Workers
- Decent return to Share holders

**See whether we satisfy all these requirements.**
**If you are satisfied, Tell others. If not, Tell us.**

Total Investments in Government and other Approved Securities : Rs. 3¾ lakhs.

H. D. RAJAH,
*General Manager.*

# தரகர்கள் வேண்டாமா?

[ஸ்ரீ ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., பி. எல்.]

மதுரையிலே நாயக்கர்கள் ஆண்ட காலம் தமிழ்நாட்டு மூவேந்தரும் மறைந்தொழிந்து தெலுங்கு பேசும் அந்நியர் ஆதிக்கம் செலுத்த நேர்ந்தது. ஒவ்வொரு துறையிலும் அந்நியர் அதிகாரமே உயர்ந்திருந்தது. தமிழர் தலைமை இழந்து தாழ்ந்து பணிந்து வாழ நேர்ந்தது. அரசாங்கத்திலும் சரி, பட்டாளத்திலும் சரி தெலுங்கு நாய்க்கர்களே பதவியில் இருந்தார்கள். தமிழ்க் குறுநில மன்னர்களும்கூட அத் தெலுங்கர்களோடு கொண்டு கொடுத்து உறவாடினால்தான் சிறப்பு என்று நம்பினார்கள். கல்வித் துறையிலுங்கூடத் தமிழ்ப் புலவர்களைக் காட்டிலும் தெலுங்குக் கவிகள் எண்ணிக்கையிலும் கௌரவத்திலும் உயர்ந்திருந்தார்கள். நன்மதிப்பைக் கருதித் தமிழரும் தெலுங்கில் கவி பாடத் தொடங்கினார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் நாட்டின் உயிர்நாடியான வாணிபம் அந்நியரான தெலுங்கு வைசியர் கையில் போனதில் வியப்பொன்றுமில்லை. வேற்றரசர் ஆளுகையில் உள்ளூரார்க்கு ஏது உயர்வு? நகரங்களிலும் சரி, நாட்டுப்புறங்களிலும் சரி, தென் குமரி தொடங்கி வட வேங்கடம்வரை உள்ள அத்தனை தமிழூர்களிலும் ஒரொரு தெலுங்கு வர்த்தகனைக் குடியேற்றி, அவனுக்கு அரசாங்க அங்கீகாரம் அளித்து வந்தார்கள் நாய்க்கர்கள். தமிழ் பேசும் வணிகச் சீமான்கள் நாளாவட்டத்தில் வாணிபத்தை இழந்து, இறுதியில் 'தரகு' பிடித்துப் பிழைக்கும் நிலைமைக்கு வந்துவிட்டார்கள். கிராமாந்தரங்களில் சில்லரை வியாபாரமாகட்டும், நகரங்களில் மொத்த வியாபாரமாகட்டும் துறைமுகப் பட்டினங்களில் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகமாகட்டும் எதுவும் தெலுங்கு வைசியச் செட்டிமாரே செய்யத் தொடங்கினார்கள். சிலப்பதிகார காலமுதல் பட்டினத்துப் பிள்ளை வரை சிறப்பித்துப் பாடப்பெற்ற தமிழ் வைசியர்களை எந்த வர்த்தகத்திலும் காண முடியாமற் போயிற்று. இந்தத் தெலுங்கர்களுக்கும் பிறநாட்டார்க்கும் இடையே சந்தி பேசி ஒருவர் கொள்ளவும் மற்றவர் கொடுக்கவும் செய்து இடையில் நின்று 'தரகு' வாங்கிப் பிழைக்க முற்பட்டார்கள்.

இதுவும் அத்தெலுங்கு வணிகர்க்குப் பிடிக்கவில்லை. எப்படியாவது இத்தமிழரை ஒடுக்கிவிட வேண்டுமென்று சூழ்ச்சி செய்தார்கள். அதற்காக ஏற்ற தருணம் வராதா என்று ஏங்கிக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் இத்தமிழ் வணிகரின் புத்திக் கூர்மையும், அறநெறி ஒழுக்கும், வாழ்க்கைத் தூய்மையும், அவரிடம் குறுநில மன்னரையும் குடி மக்களையும் வசீகரித்திழுத்ததே தான். வேற்றூரிலிருந்து வந்து தம்மை நோகாது உறிஞ்சி ஓட்டாண்டிகளாக்கி விட்டு ஓடிப்போகும் வர்த்தகர்களிடத்தில் காட்டிலும் உள்ளூரில் பிறந்து வளர்ந்து வாழ்விலும் தாழ்விலும் தம் உடனிருந்து உழலும் தமிழ் வணிகர்பால் குடிகள் அன்பு வைத்தல் இயற்கையே அல்லவா?

இப்படியிருக்க, தமிழ்நாட்டின் களஞ்சியம் என்று யாவராலும் புகழ்ந்து கொண்டாடப்பட்ட சோழநாடாகிய தஞ்சாவூர்ச் சீமையிலே வெள்ளாமை இல்லாமல் போகவே பஞ்சம் உண்டாயிற்று. எங்கு பார்த்தாலும் பசியும் பிணியும் நோயும் நொடியும் பரவி, எலும்புந் தோலுமாய்க் குடிகள் மடிந்து போனார்கள். இதைக் கேள்விப்பட்டு, திருச்சியிலே அதிகாரம் வகித்த பாளையக்காரன் மதுரை நாயக்கருக்கு விண்ணப்பம் அனுப்பினான். நாய்க்கரும்

விரைந்து வந்து தஞ்சாவூரில் முகாம் போட்டுவர்த்தகர்களைக்கூப்பிட்டனுப்பி, "ஏன் குடிகளுக்குச் சோற்றுக்கு வேண்டிய அரிசி பருப்புகளை வேற்று நாடுகளிலிருந்து கப்பல்களிலேற்றி வந்து வாணிபம் செய்யவில்லை" என்று கடுமையாய் அதட்டினர். தெலுங்கு செட்டிமார் மாய்மாலத்தில் வல்லவர்கள். கை கட்டி வாய் புதைக்க அருகில் சென்று தாழ்ந்த குரலில், "ராஜாவே ! தரகர்கள் இருக்கிறார்களே, இவர்களால்தான் விலைகள் ஏறிப்போய், ஏழைக் குடிகள் வாங்கித்தின்ன முடியாமல் பட்டினி கிடந்து பஞ்சத்தில் சாகிறார்கள். இத்தரகர்களை நாட்டைவிட்டு அனுப்பிவிட்டால் நாளைக்கே பஞ்சம் பறந்துபோய்விடும்" என்றார்கள். அப்பசப்பு வார்த்தைகளை நாயக்கர் நம்பிவிட்டதில் ஆச்சரியமில்லை.

அன்றுமுதல் 'தரகு' வர்த்தகம் செய்யலாகாது என்றும் தமிழ் வணிகர் கடை வைத்து விற்கலாகாது என்றும் உத்தரவு பிறந்தது. பார்த்தார்கள் தமிழர்கள், என்ன செய்வார்கள் ? எப்படியாவது தம்முடைய இன்றியமையாமையையும் நுண்ணறிவையும் பெருந்திறனையும் நாய்க்கருக்கு அறிவிக்கவேண்டும். இதற்கு ஒரு யுக்தி செய்வோமென்று ஆலோசித்தார்கள். தமிழர் தலைவர் ஒரு கிழவர். வெகு அநுபவம் வாய்ந்தவர். அவர் நாய்க்கர் சமுகம் சென்று, பேட்டி காண அநுமதியும் பெற்று, பழம், பூ, தாம்பூலங்களுடன் எதிர்கொண்டு வணங்கி, "துரையே, தரகர் என்றால் இலேசாய் எண்ணிவிட வேண்டாம். அவர்கள் எதையும் சாதிக்க வல்லவர்கள். ஆகுமென்பதை ஆகாமல் தடுக்கவும் ஆகாததை ஆகப் பண்ணவும் அவர்களாலாகும். வேண்டுமென்றால் மகாராஜா பரீட்சித்துப் பார்க்கலாம்" என்று சாதுரியமாகச் சொன்னார். நாய்க்கர் உடன்படவே, நாய்க்கரின் தேவியாரைப் பிறந்தகத்துக்கு அனுப்பிவிடுவதென்றும், அன்னரை நாய்க்கர் வேண்டாமென்று தடுத்து வைத்த போதிலும் தரகர் முயற்சியால் வந்துவிட வேண்டுமென்றும் பேசிக்கொண்டார்கள். நாயக்கர் ராணியாரை ஊருக்கனுப்பி ஆறு மாத காலம் என்ன ஆனாலும் வரவேண்டாம் என்று சொல்லி வைத்தார். அப்படியும்மீறி வந்துவிடாமல் படிக்குத் தம் சேனைத் தளங்களை வழியிலே நிறுத்தி அவர் வந்தால் எதிர்த்துத் தடுக்கும்படி ஏற்பாடுகள் செய்திருந்தார். தரகர்கள் முப்பது நாளைக்குள் ராணியைத் திரும்பி வரப் பண்ணிவிட்டால் 'தரகு' வர்த்தகம் செய்யலாம் என்பது உத்தரவு.

தரகர்கள் புறப்பட்டு ராணியின் பிறந்தகமாகிய கோதாவரிச் சீமைக்கே போனார்கள். அவ்வூரில் ஒரு பெரிய வீட்டைப் பேசி, அதில் இறங்கிப் பிரபலமாக விருந்துகள் வைத்து, ஊர்ப் பெரிய மனிதர்களை அழைத்துப் பேசலானார்கள். தங்கள் அரசர்க்கு இளைய தாரம் தேவை என்றும், அரசவமிசமில்லாவிட்டாலும், சற்று அழகாயிருந்தால் போதுமென்றும் இப்படிப் பல விதமாகப் பேசி வந்தார்கள். இச்சேதி காட்டுத்தீபோல் பரவியது. கேட்ட ராணி, தமிழர்களைத் தன் தந்தையரண்மனைக்கு வரவழைத்து என்ன சேதி என்று கேட்க, அவர்கள் வெகு பயந்தவர்போல் பாசாங்கு செய்து ஒன்றும் சொல்ல விரும்பாதவர்போல் இருந்துவிட்டுப் போய்விட்டார்கள். ராணியும் ஊரார் சொல்லுவது மெய்தான் என்று நம்பி இதற்காகவா நம்மை நாய்க்கர் பிறந்தகம் அனுப்பினர் என்று எண்ணி வருந்தி தந்தையிடம் தெரிவித்து ஒரு பெருஞ் சேனையுடன் புறப்பட்டு, வழியில் நிறுத்தப்பட்ட நாய்க்கர் படைகளை முறியடித்து மூன்று வாரத்துக்குள் மதுரைவந்து சேர்ந்து நாய்க்கரைப் படாதபாடு படுத்திவிட்டாள்.

இராணி சொன்ன கதையைக் கேட்டு நாய்க்கர் மூக்கின்மேல் விரலை வைத்தார். ஆகா, இந்தத் தமிழ் வணிகரின் திறமையே திறமை, இவர்களல்லவா எந்தச் சீமையிலிருந்தாலும் கொண்டுவர வல்லவர்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்து, "ஐயா, ஆதித்தமிழ் வணிகரத்தினங்களே, நான் அறியாமல் அந்த

ஆந்திரச் செட்டிமார் பொறுமையால் சொன்ன கோள்மொழிகளை மெய்யென் றெண்ணி, உங்களை நாட்டு வாணிபம் செய்ய வொட்டாமல் அநீதியான உத்திரவு பிறப்பித்தேன். இதோ நீங்கள் என் தேவியைத் திரும்பிவரச் செய்த இந்த ஒரு காரியத்திலிருந்தே உங்கள் அபார சாமர்த்தியம் வெளியாயிற்று. உங்களால் ஆகாத காரியமில்லை. நீங்கள் இல்லாமல் வர்த்தகமே நடப்பதருமை. இத்தமிழ் நாட்டின் வர்த்தகம் செழிக்கத் தரகர் வேண்டாமா? வேண்டும். நீங்கள் தரகராயிருந்து வாணிபம் செழிக்கப் பண்ணுங்கள் உங்களில் தனியொருவருக்குக்கூட விருதாயிருக்கும்படி இப்பேர் 'தரகனார்' என்று வழங்கட்டும்" என்று கூறி அவர்களுக்குத் தகுந்தபடி சன்மானம் கொடுத்தனுப்பி ராணியிடம் நடந்ததை எல்லாம் எடுத்து விவரித்துச் சொல்லி அவரையும் அனைத்தும் கேட்டு நகைக்க வைத்தார். உண்மையில் நாய்க்கர் உள்ளம் மாறுபடவில்லை என்று நம்பின பிறகு இருவரும் மனமொத்து உல்லாசமாக வெகுநாள் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். தரகனார்மாரும் நாய்க்கருக்கும் இராணியாருக்கும் அடிக்கடி அரும்பொருள்களைக் கொண்டு கொடுத்துக் கொஞ்சங்கொஞ்சமாய் இழந்த வர்த்தகச் செல்வாக்கை மீண்டும் பெற்று வாழ்ந்தார்கள்.

---


## நமது புஸ்தகசாலை

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1. ஜடாதரன் ... | 1 | 12 |
| 2. தேசபக்தன் கந்தன் ... | 2 | 0 |
| 3. முருகன் ஓர் உழுவன் ... | 1 | 8 |
| 4. பச்சைக்கிளி ... | 2 | 0 |
| 5. கதைக்கோவை III வால்யூம் | 7 | 8 |
| 6. சந்தனக் காவடி ... | 1 | 6 |
| 7. ஆரியமத உபாக்யானம் முதல் பாகம் ... | 0 | 10 |
| 8. ஷை இரண்டாம் பாகம் ... | 0 | 12 |
| 9. கைக்குத்து அரிசியும் மில் அரிசியும் ... | 0 | 10 |
| 10. உணவும் சுகவாழ்வும் ... | 1 | 4 |

**சுவேதாரண்ய ஆசிரம புஸ்தகசாலை,**
34, அலமேலுமங்காள்புரம்,
மயிலாப்பூர், சென்னை

---

## BOOKS FOR ALL

*By K. S. Venkataramani*

| | | |
|---|---|---|
| 1. Paper Boats (5th Edition) ... | 1 | 4 |
| 2. Kandan, the Patriot | 2 | 0 |
| 3. On the Sand-Dunes ... | 1 | 0 |
| 4. The Indian Village-A Ten Year Plan (2nd Edition) ... | 0 | 12 |

*By Manjeri S. Iswaran*

| | | |
|---|---|---|
| 5. Naked Shingles ... | 2 | 0 |
| 6. Angry Dust ... | 2 | 0 |

*By C. M. Srinivasan*

| | | |
|---|---|---|
| 7. Organisation and Organisations ... | 1 | 8 |

**Svetaranya Ashrama,**
34, Alamelu Mangapuram,
Mylapore, Madras.

# சாந்தி

[சூர்யதாஸன்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

பிசாசுகளின் நடமாட்டம் ஒழிய வேண்டும். ஆனால் சுந்தரியிடம் உண்மையைக் கூறுவது எப்படி? அருணாவின் உள்ளத்தை அவள் அறியும்படி செய்வது எப்படி? நானோ தொண்டு கிழம். பேசவும் சக்தி இல்லை. பேசினாலும் இந்த ஏழை சொல் அம்பலம் ஏறுமா? மேலும் குமார் பேசா மடந்தையாக இருக்கிறான். இதில் நான் செய்யக் கூடியது என்ன இருக்கிறது? முடிந்தால் அருணாவிற்காக உயிரை வேண்டுமானாலும் கொடுத்துவிட மாட்டேனா?

"நான் எவ்வளவு கெட்டிக்காரி. அப்பா, எத்தனை சாமார்த்யமாகக் காரியத்தை முடித்துவிட்டேன்."

சந்தோஷம் பொங்கித் ததும்பும் அருணாவின் முகம் என்னை நோக்கியது. மலர்ந்த முகத்தைக் கண்டாள். அருணாவிற்கு ஆனந்தம் என்றால் யார்தான் அதில பங்கெடுத்துக்கொள்ள மாட்டார்கள்? விஷயம் கொஞ்சம் ஸ்வாரஸ்யம் தான். இன்று குமார் வந்திருந்தான். சுந்தரி வாய்குளிரப் பேசி மரியாதை செய்தாள்.

"அருணாவை எனக்கு மணம்செய்து தருகிறீர்களா?"

இந்த வெடி குண்டை பதட்டமில்லாமல் சுந்தரியிடம் போட்டான் குமார். சுந்தரி திடுக்கிட்டாள்.

"கல்யாணம் செய்துகொள்ள முடியாது; சாந்திக்கல்யாணம்தான்செய்து கொள்ளலாம்."

"அதெப்படி? கல்யாணத்திற்குப் பிறகுதானே அது."

"மற்ற வகுப்பில் அப்படி. பொட்டுக் கட்டினால் எங்கள் வகுப்பில் இப்படி." இதற்குத் தாறுமாறாகச் செய்தால் குலமே நசித்துவிடும்."

தாசிமார் மரபின் முறைகளையும் மர்மங்களையும் எடுத்தோதினாள் சுந்தரி. ஐயாயிர ரூபாயும், மற்ற நிபந்தனைகளும் குமாரின் ஸம்மதம் பெற்றன.

"அருணாவின் இஷ்டத்தைத் தெரிந்து கொண்டீர்களா?"

படித்த முட்டாள் குமார் போட்ட இரண்டாம் குண்டு இது. செவிடன் காதில் ஊதிய சங்குபோலாயிற்று சுந்தரி எடுத்தோதிய தாசிமார் மரபு.

"நாங்கள் சொன்னால் அருணா மறுப்பாளா?"

"இருந்தாலும் மணம் செய்துகொள்கிறவள் அவள் தானே?"

"சரி, நீங்களே கேட்டுவிடுங்கள். அருணாவை அழைத்து வருகிறேன்."

சுந்தரி சென்றாள். அருணாவை அழைத்தாள். அருணா தாயுடன் வந்தாள். குமாரின் முன் நின்றாள். கண்கள் பூமியை நோக்கி இருந்தன.

"அருணா. உனக்கு என்னை மணம் செய்துகொள்ள இஷ்டமா? மனதிலுள்ளதைப் பயப்படாமல்சொல்லு."

"எல்லாம் பெரியவர்களின் இஷ்டம்."

தாயின் மொழிப்படி கிளிப்பிள்ளை பேசிற்று.

"பெரியவர்களை நான் மணக்கப் போவதில்லையே? உன்னைத்தானே கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன், உன் இஷ்டமல்லவா தெரியவேண்டும்.'

"என்னைக் கேட்கவும் வேண்டுமா?"

குமார் சிரித்துவிட்டான். இருந்தாலும் இத்துடன் விடுவதாக இல்லை.

"உன்னைக் கேட்காமல் வேறு யாரைக் கேட்க முடியும்? உனக்கு இஷ்டமா? பதில் சொல்லு அருணா."

"இதைவிட நான் வேறு என்ன பதில் சொல்ல முடியும்?"

"சரி, நீ போ அருணா, பாக்கி எல்லாம் நான் பெரியவர்களிடம் பேசிக்கொள்கிறேன்."

இதில் என்ன இருக்கிறது? நான் கெட்டிக்காரி என்று பெருமையடித்துக்கொள்ள, அருணா என்ன செய்துவிட்டாள்? அந்தப் பெண் அதையும் சொன்னாள்.

"வாயைத் திறவாது, குனிந்த தலை நிமிராது. யாவரையும் ஏமாற்றித் தாய் சொல்லச் சொன்ன வார்த்தைகளை வைத்துக்கொண்டே, என் ஸம்மதத்தை நான் தெரிவித்துவிடவில்லையா? அதுதான் என் கெட்டிக்காரத்தனம்."

முழுப் பூஷிணியைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறாளே பெண். எப்போது, எப்படிச் சொன்னாள் தன் இஷ்டத்தை.

"இஷ்டமா என்று கேட்டதற்கு, என்னைக் கேட்கவும் வேண்டுமா என்று பதில் சொன்னால் அதற்கு அர்த்தம் என்ன? இஷ்டம் என்று தானே. இதை அறிந்துதானே அவர் சிரித்தார். அப்பொழுது அவர் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று எனக்கு எவ்வளவு ஆசை? ஆனால் தலையை நிமிரக்கூடாதே. அம்மாவின் கட்டளையை மீறலாமா?"

பிழைத்துக்கொள்வாள். கெட்டிக்காரி தான். அன்பிருந்தால் அதைக் காட்ட வழியா தோன்றாது. ஆனால் சுந்தரிக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும். 'என் வார்த்தைப்படிதான் இங்கு எல்லாம். நான் கீறின கோட்டை அருணா தாண்டமாட்டாள்' என்று வீண் ஜம்பம் காட்டத்தானே சுந்தரி இப்படிக் கட்டளை போட்டாள். தனக்கும் இஷ்டம். தன் மகளுக்கும் இஷ்டம். இதன் பிறகு இந்தக் கட்டளை ஏன்? மகளின் இஷ்டம் அவளுக்கு எப்படித் தெரியும்? அருணாதான் அவளிடம் இதைப் பற்றித் தன் வாயையே திறக்கவில்லையே என்றுதானே யோஜிக்கிறீர்கள். அய்யர், அய்யங்கார், இத்தியாதிகளைப் பற்றிக் குறை கூறி, எனக்குப் பிடிக்கவில்லை என்று கூறும் அருணா, குமாரியைப்பற்றி வாயே திறக்காமல் இருந்து தன் இஷ்டத்தை வெளிக்காட்டவில்லையா?

* * *

என்ன இருந்தாலும் அருணாமேல் எனக்குக் கொஞ்சம் கோபம்தான். நல்லது கெட்டது எது நடந்தாலும், தன் மனதிலுள்ளதை எல்லாம், என்னிடம் வந்து உட்கார்ந்து, கொட்டி அளந்துவிடுவாள். ஆனால் சாந்திக் கல்யாண இரவில் என்ன நடந்தது என்பதைப் பற்றிப் பேச்சு மூச்சே இல்லை. அது என்ன அப்படிப்பட்ட இரகசியம்? என்னிடங்கூடச் சொல்ல முடியாத சிதம்பர இரகசியம். ஆனால் மறு நாட்காலை என்னிடம் வந்தபோது என்ன வெட்கம். முகத்தில் என்னகளை. ஒரு புதுவித மலர்ச்சி, என்னவென்று விவரிக்க முடியாத ஒரு சோபை, ஓர் ஆயாஸம். அதில் ஓர் உல்லாஸம். ஸஹஜமாய் என்னைத் தொட்டுப் பேசுவாள். இன்று அதுகூட இல்லை. ஏன்? நான் அன்னியமாகி விட்டேனா?

சாயங்காலம் குமாரைக் கூட்டி வந்தாள். கட்டுக் குடுமியுடன், வாட்டமாய்க் கொழு கொழுவென்று பேர் வழி இருப்பான் என்று எண்ணிஇருந்தேன். நான் ஒரு கட்டுப்பெட்டிதானே. அதுவும் வீட்டோடு கட்டப்பட்டிருக்கும் பாட்டி காலத்துக் கட்டுப் பெட்டி. ஆகவே நான் நினைத்தற்கு மாறாக ஆஸாமி ஒல்லியாக இருந்தான். ஏன்? எலும்பும் தோலுமென்றே வைத்துக்கொள்ளுங்கள். சிவப்பு நிறம். மொட்டை - அதான் குல்லாக் குடுமி. என்னமோ க்ராப்புத் தலையாமே அது. சிறு வயதிலேயே கண் தெரியாது போலிருக்கிறது. அதற்கு மூக்குக் கண்ணாடி, கையில் கடியாரம், மோதிரம், கடுக்கன் ஒன்றையும் காணோம். துப்பட்டி மாதிரித் தடித் துணியில் வேஷ்டியும் சட்டையும். இதெல்லாம் நவநாகரிகம் போலிருக்கிறது. எனக்

கென்ன தெரியும்? அவன்மேல் அருணு எப்படி ஆசைப்பட்டாள் என்பதுதான் ஆச்சர்யமாக இருக்கிறது. ஆனால் அவன் முகத்திற்குக் களை உண்டாக்கியது அவன் பரந்த நெற்றிதான். தனியாக அவனைப் பார்த்திருந்தால் அருணுவிற்குத் தகுந்தவன் என்று ஒருநாளும் சொல்லி யிருக்கமாட்டேன். ஆனால் அவர்களிருவரும் ஜோடியாக நின்றது, ஒருவர்க் கேற்றவர் மற்றவர் என்று காட்டுவதற்காகத்தான் போலிருந்தது

"அவர் கண்கள் எவ்வளவு அழகு தெரியுமா? உயிருடன் ஜ்வலிக்கும். காந்தம்போல் இழுக்கும்."

அருணுவின் இந்த ஜபத்தைக் கேட்டு அலுத்துப் போயிருந்தேன். அந்த அழகு, உயிர் காந்தம் இவை எல்லாம் தேடித் தேடி என் கண்கள் பூத்தது தான் மிச்சம். அவை ஒன்றும் என் கண்ணுக்குப் புலப்படவில்லை. வயஸானதால் எனக்குத் தெரியவில்லையோ, அல்லது, அருணுவின் அன்பு அவள் கண்களை மறைத்துவிட்டதோ?

குமார் அடிக்கடி வருவான். அவன் வராவிட்டால், அருணுவே போய்விடுவாள் அவனைத் தேடிக்கொண்டு. பிறகு வீட்டின் நினைவே கிடையாது. நினைவிருந்தால், கச்சேரிகளுக்காகத் தந்திகள் பறந்தும் பேசாது இருப்பாளா?

"என்ன இது அருணு, உன் சங்கீதத்தால் தங்கள் மனப்புண்ணை ஆற்றிக் கொள்ள மக்கள் தவிக்கும்பொழுது நீ இங்கு இருக்கலாமா? பிறர்க்கு உபகாரம் செய்யவேண்டாமா?"

"என் மனப்புண்ணிற்குச் சாந்தி தர அங்கு யார் இருக்கிறார்கள்? எனக்குபகாரம் செய்யக்கூடியவர் அங்கு இருக்கிறாரா!"

இப்படிக் குமாரின் வாயை அருணு அடைத்தால் அவன் செய்யக்கூடியது என்ன? தனக்குத் தெரிந்ததை, அவளுக்குப் பிரியமானதைச் செய்து அவள் வாயை அடைத்தான் வேறென்ன செய்யமுடியும்.

குமாரின் கடிதங்களை என்னிடம் வாசிப்பாள் அருணு. பையன் கெட்டிக்காரன்தான். தாசிமார்களும் அவர் சந்ததியாரும் தங்களை இசை வேளாளர் என்று கூறிக் கொள்வதைப் பற்றி அவன் எழுதியதைக் கேட்டு வயிறு குலுங்கச் சிரித்தேன்.

"ஏன் ஐயா புதுக்குலமொன்றைச் ச்ருஷ்டி செய்திருக்கிறீர்கள்? இருப்பவைபோதாதென்று இன்னொன்று" என்று தாசிமார் சந்ததியாரைக் கேட்டால் அவர்கள் சொல்லும் ஸமாதானம் இதுமாதிரிதான் இருக்கும்.

"முன்னெல்லாம், எங்கள் குலம் எதுவென்றால் நாங்கள் விழிப்போம். பிள்ளை, முதலியார் என்றெல்லாம் கூறிக்கொள்வோம். இதனால் அநேக சந்தேகங்களும், சங்கடங்களும் உண்டாயின. இனிமேல் அக் கவலை இல்லை. ஏன், இப்பொழுது எங்கள் குலம் இசைவேளாளர் குலமல்லவா? இதன் பிறகா சந்தேகம். குலப் பெயரைக் கூறியதும், 'ஓ, தேவரடியார்களின் சந்ததிகள் தானே' என்று நிச்சயப்படுத்திவிட மாட்டார்களா?"

இசை வேளாளர் குலத்திற்குக் குமார் கொடுத்த வியாக்கியானம் சிரிப்பை ஏன் உண்டாக்காது? சுந்தரியையே ஒருநாள் அந்தரத்தில் விட்டான்.

"நான் கேட்கிறேனென்று கோவித்துக்கொள்ளக் கூடாது. உங்களுள் குலம் என்ன?"

வீண் ஜம்பத்தில் சுந்தரிக்குப் பிரியமல்லவா? இல்லாவிட்டால் இந்தக் கேள்வி ஏன்? "அய்யர் வந்திருக்கிறார், முதலியார் நாளை வருகிறார்" என்றெல்லாம் மற்றப் பெண்கள் சொல்லுவதைக்கேட்ட சுந்தரி, தானும் அப்படிப் பெருமையடித்துக் கொள்ள ஆசைப்படாவிட்டால் சுந்தரியாவாளா?

"நான் உங்கள் மாப்பிள்ளையா, அல்லது என் குலம் உங்கள் மாப்பிள்ளையா?"

இப்படிக் குமார் பதிலளித்தால் சுந்தரி என்ன செய்வாள். புதிதாக வழி கண்டுபிடித்தாள். அதனால் பெருமையடித்துக்கொள்ள இடம் அதிகமும்

கிடைத்தது. "மாப்பிள்ளை" என்று குமார் கூறியதையே கைப்பிடித்து குமாரைக் குறிப்பிடும் வார்த்தையாகக் கைக்கொண்டாள் சுந்தரி. இந்த வார்த்தை மற்றப் பெண்களுக்கு ஏது?

* * *

குமார் எவ்வளவு அழகாகப் பாடுகிறான். இன்று அருணாவும் அவனும் சேர்ந்து பாடினார்கள். ஏன் குஷி பிறக்காது? அருணாவிற்குப் பிள்ளை பிறக்கப் போகிறதாம். எல்லாம் இவர்கள் கையில் தானா? பெண் பிறந்தால் மறந்தே போய்விட்டேன். 'காதல்' என்ற வேத சூத்திரத்திற்குப் புது உரை, அருணா அளித்த உரை, தெரியுமா?

" மணந்தால், கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள காதல் கடமையாக முடியும். கடமையைச் செய்வதில் ஆர்வம் எப்பொழுதும் ஏது? வெறுப்பு கூட ஏற்படலாம். காதலின் விலங்கே தாலி. காதல் வெள்ளத்தை மணத்தால் அணைகட்டக் கூடாது."

இதெல்லாம் அந்தப் பையன் குமாரின் வேலைதான். இல்லாவிட்டால் அருணாவிற்கு இப்படி எல்லாம் பேசத் தெரியுமா? குமாரின் வாக்குத்தான் அவளுக்கு வேத வாக்கைவிட உயர்ந்ததாயிற்றே!

ஆஹா குழந்தை எவ்வளவு அழகு! அலுக்காது பார்த்துக் கொண்டிருக்கலாம். குழந்தையுடன் வந்துவிளையாடுவாள் அருணா. என்னிடம் ஆவலாய் ஓடிவரும். உயிருக்குப் பயந்தவள் போல் ஓடி எடுப்பாள் குழந்தையை அருணா. நான் என்ன பேயா? இல்லை பிசாசா? குழந்தையை முழுங்கியா விடுவேன். அவ்வளவு கல் நெஞ்சா நான் கொண்டிருக்கிறேன்? ஆமாம் அவர்களுக்கு என்ன தெரியும்? என் உள்ளத்தையும் குழந்தைகளின் உள்ளத்தையும் அறிவார்களா? ஒன்றிற்கொன்று உள்ளபாசம் அவர்களுக்குத் தெரியுமா? இந்தப் பாசத்தால்தானே நானிருக்குமிடத்தை நாடுகின்றன குழந்தைகள். கருடன்முன் பிரமித்துப் பாம்பு அசையாது நிற்பதுபோல் குழந்தைகளும் பிரமையால் என்னை அடைகின்றனவாம். சுத்தப் பைத்தியக்காரத் தனம். நானும் குழந்தை. குழந்தைகள் குழந்தைகளைத் தானே தேடும். குழந்தையாகத் தோன்றாவிட்டால் குழந்தைகள் என்னிடம் வருமா? குழந்தை முகத்தைதானே என்னிடம் குழந்தைகள் காண்கின்றன.

"ப்ரேம்குமார்"

இதுதான் குழந்தையின் பெயர். அருணாவின் குமாரன் பெயர். அன்பு ததும்ப அருணா மொழியும் பெயர்.

" என் அன்பின் உருவாய், என் குமாரின் உள்ளத்தின் விளைவாய், எங்கள் உயிராய் விளங்கும் ப்ரேம் குமார்"

சிறு வயதின் தடுமாற்றம், வெறும் பிதற்றல், என்ன பெயர்? இல்லை அதற்குத்தான் என்ன அர்த்தம்? இதைவிட வேறொன்றும் அகப்படவில்லையா? பரமனின் ஆயிரக்கணக்கான பெயர்களில் ஒன்றுகூடப் பிடிக்கவில்லையா?

* * *

காத்திருந்தவள் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போனதை, நாராயணசாமி அய்யங்காரும், அருணாசல அய்யரும் பொறுக்கவில்லை. பழி வாங்கத் தீர்மானித்தார்கள். குமாரை அழித்தால் அருணா, வழிக்கு வருவாள் என்று நினைத்தார்கள். முனிஸாமிமுதலியார் மந்திரிப் பதவி ஏற்றுத் தந்திரம் சொல்லிக் கொடுத்தார். குமாரின் வியாபாரத்துக்குப் போட்டி வியாபாரம். இவர்கள் விலை இறக்க அவனும் விலை இறக்குவான். மறுபடியும் அவர்கள் விலை குறைய இவன் விலையும் குறையும்: இப்படிப் போட்டா போட்டி. அய்யரும் அய்யங்காரும் தாங்கக்கூடிய கைகள். நஷ்டம் தாங்காது கஷ்டப்பட்டான் குமார். நாலா பக்கமும் கடன். ஏதோ செய்து சமாளித்து வந்தான்.

முன்னெல்லாம் அருணாவின் வீட்டுச் செலவிற்குப் பண கொடுப்பான்

குமார். இப்பொழுது அது நின்றது. அருணாவும் கேட்பதில்லை. இருந்தால், கூப்பிட்டுக் கொடுப்பார், கொடுக்காம லிருக்கமாட்டார் என்பது அவளுக்கா தெரியாது? பணத்திற்குக் கஷ்டமும் அவள் படவில்லை. கச்சேரிகள்தான் ஏராளமாயிற்றே. ஆனால் சுந்தரியின் மனம் அதை ஏற்குமா? ஊரார் வாய் தான் சும்மா இருக்குமா?

"என்ன சுந்தரி, காலா காலத்தில் சம்பாதிக்கா விட்டால் பிறகு எப்படி? அம்புஜத்தின் உடம்பு முழுதும் வைரம். குந்தளத்தின்மேல் ஐந்து வேலி. சுப்புவின் மதிப்பு முப்பதாயிரம். இவர்களைவிட அருணா எதில் குறைவு? ஆனால், நாலு நகை நட்டு, இரண்டு காணி நிலம், வீடு வாசல், என்று ஏதாவது அவளுக்கு உண்டா? இப்பொழுது தேடிக்கொள்ளா விட்டால் அவள் கதி என்ன? வயதானால் அவளை யார் சீந்துவார்கள். உனக்குக்கூடத் தெரியவில்லையா? காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டாமா?"

இப்படி ஊரார் கொள்ளி வைத்தால் சுந்தரியின் உள்ளம் ஏன் பற்றிக்கொள்ளாது? சரியாகக் கரைத்தால் கரையாதது ஏது? தருணத்தில் முனிஸாமி முதலியார் பிரவேசித்தார். பதினாயிரத்தோடு அவர் பரிதவிக்கிறார், இருபதினாயிரத்தோடு இவர் உருகுகிறார், என்றெல்லாம் அளந்தார் முதலியார். பணத்தாசையில் வசப்பட்டாள் சுந்தரி. அருணாவின் மனதைக் கலக்க ஆரம்பித்தாள். இதை எண்ணி அருணா எவ்வளவு புண்ணாகி இருப்பாள். குமாரிடம்கூடச் சொல்லி விட்டாள். அவர்களுக்குள் ரகசியமே கிடையாதே. குமார் மனம் நொந்தது வெளியில் தெரியவில்லை. ஆனால் அருணாவிற்குத் தெரியாமலிருக்குமா? முனிஸாமி முதலியாரின் வேலையைக் கேலிக் கூத்தாக்கினான்.

சுப்பிரமணிய பிள்ளை கொஞ்சம் அசடு. ஆனால் ப்ருஹஸ்பதி என்று எண்ணம். அசடு வழிய நேரே வந்தார். மறைமுகமாகப் பேசி; அருணாவின் நேசம்பெறப் பிதற்றினார். அவரைப்போல் பேசி நடித்துக் குமாரைச் சிரிக்க வைத்தாள் அருணா.

* * *

சிரித்துக்கொண்டே ஓடி வந்தாள் அருணா இன்று. சாதாரணமாய் அவளிடம் சிரிப்பைக் காண முடியாது. கடுகடு என்று இருப்பாள் என்று எண்ணாதீர்கள். புன்னகை பூத்த முகம். ஆனால் வாய்விட்டுச் சிரிக்க மாட்டாள். சிரித்தால் வீணையின் ஒலிக் கலப்புப்போல் இருக்கும் அவள் சிரிப்பு. அருணாவின் பாட்டு, அருணாவின் பாட்டு என்று புகழ்கிறீர்கள். அவள் சிரிப்பிற்கு அது ஈடே ஆகாது. சிரிக்கும் அவள் முகத்தைக் கண்டால் பிறகு அதற்கு அடிமைதான். அதனால்தான் சிரிப்பதில்லையோ?

"அப்பா, தாங்க முடியவில்லை. சிரித்துச் சிரித்து வயிறு வலிக்கிறது."

சரி, ஏதோ விஷயம் இருக்கிறது. அதுவும் அருணாவையே சிரிக்க வைத்த விஷயம். தானே அம்பலத்துக்கு வரும் என்று பேசாமல் இருந்தேன்.

"எல்லாம் அவர் செய்த கூத்துத்தான்."

'அவர்' என்றால் குமாரைத்தான் அருணா குறிப்பாள் என்று தெரியுமே. இருந்தாலும் வேடிக்கைக்காக யார் என்று தெரியாதுபோல் பாவனை செய்தேன். பேசாமல் பார்த்தேன்.

"ஓஹோ, ஒன்றும் தெரியாதுபோல் பார்த்தால் நான் ஏமாறுவேன்? கேலிதானே செய்கிறாய். சரி இருக்கட்டும். எல்லாம் உன் மாப்பிள்ளை, என் குமார் செய்த வேலைதான்."

அவள் சிரித்தாள். அவளைப் பார்த்து நானும் சிரித்தேன். வேறு என்ன செய்ய முடியும்? நடந்த விஷயம் இது தான். குமார் செய்த கூத்து என்று சொன்னதால், குமார் வந்திருக்கிறான் என்பது விளங்கி இருக்குமே. அப்பா குதிருக்குள் இல்லை என்று சொல்ல வேண்டுமா? சரி. குமார் வந்திருந்தான். காபி சாப்பிடும் தருணம். காபி எடுத்து வரக் கீழே சென்றாள் அருணா. அவள்

திரும்பி வருவதற்குள் சுப்பிரமணிய பிள்ளையும், முனிஸாமி முதலியாரும் வந்து குமாருடன் பேசிக்கொண் டிருந் தார்கள். குமாருக்குக் காபி கொடுத் தாள் அருணா.

"பிள்ளைவாளுக்குக் காப்பி இல்லையா?"

வேறு தம்ளர் எடுத்துவரத் திரும்பி னாள் அருணா. மாடியிலிருந்த ஒரு தம்ளரையும் எச்சில் செய்துவிட்டான் குமார்.

"வேண்டாம் அருணா, இந்தத் தம்ளரி லேயே பிள்ளைவாளுக்குக் காபி கொடுக்கலாம்."

எச்சில் தம்ளரை நீட்டினான் குமார். பிள்ளை திடுக்கிட்டார். முதலியார் தலை யைச் சொறிந்தார். அருணா தயங்கி னாள்.

"அருணா, ஏன் யோஜனை? என் பெரிய உச்சிஷ்டத்தையே சாப்பிடப் பிள்ளைவாள் ஆவலுடன் இருக்கும் போது இந்தச் சிறு உச்சிஷ்டத் தையா மறுக்கப் போகிறார்? இதி லேயே கொடு."

சிரிக்காது மறுபடியும் தம்ளரை நீட் டினான் குமார். பிள்ளையின் முகம் சுண்டியது. விஷயம் விளங்கியது அரு ணாவிற்கு. தம்ளரில் காபியை விட்டாள் சிறிதும் சிரிக்காமல். முனிஸாமி முதலி யார் மூளைக்கு விஷயம் பிடிபடவில்லை. விளக்கம் தேடிக் குறுக்கிட்டார் முதலி யார் துடுக்காக.

"ஏன் ஸார், உச்சிஷ்டம் என்றால் என்ன?"

"வேறு ஒன்றுமில்லை, ஒருவர் உண்டு அனுபவித்து மீதியான எச்சில் வஸ்து தான் உச்சிஷ்டம்."

நிதானமாய், இந்தப் பதிலுடன் காபி நிறைந்த தம்ளரைப் பிள்ளையிடம் நீட் டினான் குமார். அடிபட்ட நாய்போல் வாலை மடக்கிக் கொண்டார் முதலியார் வெட்கத்தால் பிள்ளை உடம்பு குன்ற எழுந்தார்.

"ஸார், நான் புத்தி இழந்து முட்டாள் தனம் செய்தேன். குருடனைப் போல் இருந்தேன். கண் திறந்து விட்டு நான் பாவம் செய்வதைத் தடுத்தீர்கள். பிசகை மன்னித்து என்னை அருணாவின் அண்ணனாக ஏற்றுக்கொள்ள வேண்டும். என்னை மன்னிக்கும்படி அருணாவை நீங்கள் தான் வேண்ட வேண்டும்."

காலில் விழுந்தார் பிள்ளை. அவரைத் தடுத்தான் குமார். அருணாவிற்கு ஓர் அண்ணனையும் கொடுத்தான். யாரு மறியாது, திடீரென்று ஓர் அண்ணனைக் குமார் இப்படி உண்டாக்கினால் அருணா ஏன் சிரிக்கமாட்டாள்?

(தொடரும்)





ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் வெளியீடுகள்

ஒவ்வொரு புத்தகமும் பல படங்களுடனும் ஸ்ரீ ஆசார்யாளுடைய அனுக்ரஹ பூர்வமான ஸ்ரீ முகத்துடனும் கூடியது

ஸ்ரீமூக கவி பாடிய ஐந்நூறு சுலோகங்கள் கொண்ட

# ஸ்ரீ மூக பஞ்சசதீ

ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ் அனுவாதமும்

தமிழ் நாட்டிலெங்கும், "மூகனைக் கவி பாடுவித்த பெருமை வாய்ந்த ஸ்தலம்" என்று போற்றப்பெற்ற தான காம கோட்டத்து ஸ்ரீ காமாக்ஷியானவள், தன்னை எல்லோரும் பக்திபரவசராகிப் பாடிக்களித்துப் பேரின்ப மெய்துமாறு ஸ்ரீ மூக மஹாகவியைக்கொண்டு பாடுவித்தவையான ஆர்யா சதகம், பாதாரவிந்த சதகம், ஸ்துதி சதகம், கடாக்ஷ சதகம், மந்தஸ்மித சதகம் என்று பாகுபாடுபெற்ற ஐந்நூறு சுலோகங்களையும் தமிழிலே பொழிப்புரையோடும் அங்கங்கே பொருளை விளக்கு வதற்கான குறிப்புகளோடும் பதிப்பித்து ஸ்ரீ அம்பாளின் வடிவழகைக் காட்டும் மூவர்ணப் படங்கள் 'மூக கோட்டம்' என்று பிரஸித்திபெற்ற காமகோட்டத்துக் கோபுரங்கள் முதலியவற்றோடும் ஸ்ரீ காமகோடியின் கிருபையே வடிவெடுத்தாற் போல விளங்கும் ஜகத்குரு ஸ்ரீ ஆசார்ய பூஜ்ய பாதர்களின் படத்தோடும் அச்சிட்டு காமகோடி கோசஸ்தானத்துப் பதினெஞன்றாவது பிரசுரமாக வெளி வருகின்றது.

இதனை எல்லோரும் வாசித்துப் பேரானந்த மடைவார்களாக என்று ஸ்ரீ மூக கவியையும் அவரைக்கொண்டு தன்னைப் பாடுவித்துக் கொண்ட ஸ்ரீ காமாக்ஷி தேவி யையும், ஸ்ரீமத் ஆசார்யர்களை முன்னிட்டுக்கொண்டு, பிரார்த்தித்துக் கொள்ளப்படு கின்றது. 260 பக்கங்களுக்கு மேலுள்ள இப்புத்தகத்தின் விலை ரு. 1 8 0.

1. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் :—ஸ்ரீ சங்கர பகவத் பாதர்க ளருளிய பாஷ்யத்திற்குத் தமிழ் அனுவாதம் ஸ்ரீ வே. நாராயணன் எழுதியது. (2-ஆம் பதிப்பு) ... ரூ. அ. 1—4
2. ஸ்ரீ விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்ரம் :—ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் இயற்றியது. ஸ்ரீ பண்டிட் ஏ. எம். ஸ்ரீநிவாஸாசார்யாரவர் களும் ஸ்ரீ வே. நாராயணன், எம்.ஏ., எம்.எல். அவர்களும் எழுதிய தமிழ் ஆங்கில அனுவாதங்களுடனும், பெடரல் கோர்ட் ஜட்ஜ் கனம் ஸர் எஸ். வரதாசாரி அவர்கள் முன்னுரையுடனும் கூடியது. ... 0—8
3. ஸ்ரீ பஜகோவிந்தம்:—ஸம்ஸ்க்ருத மூலமும் ஸ்ரீ ஏ. எஸ். நடராஜ ஐயர், பி. ஏ., எம். எல். எழுதிய தமிழ் அனுவாதமும். ... 0—2½
4. ஸ்ரீ சாந்தி விலாஸம் :—ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய ஸம்ஸ்க்ருத ஸ்தோத்திரமும் ஸ்ரீ Y. மகாலிங்க சாஸ்திரியார், எம். ஏ., பி. எல். எழுதிய தமிழ் அனுவாதமும்; கனம் ஜட்ஜ் திவான்பகதூர் N. சந்த்ர சேகர அய்யர் அவர்கள் எழுதிய முன்னுரையுடன் கூடியது. ... 0—6
5. ஸ்ரீ ஸ்யாமளா தண்டகம் :—முதலிய ஐந்து தேவி ஸ்தோத்ரங்களின் ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ் அனுவாதமும்; ஸ்ரீ K. பாலசுப்ரமண்ய ஐயர், பி.ஏ., பி.எல். எழுதிய முன்னுரையுடன் ... 0—6
6. ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ரர்கள் அருளிய சிவ மானஸிக பூஜா, கீர்த்தனங்கள், ஆத்ம வித்யா விலாஸ: என்னும் நூல்கள் : ஸ்ரீ வே. நாராயணன் எழு திய தமிழ் ஆங்கில அனுவாதங்களுடன் கூடியவை. (2-ஆம் பதிப்பு). 0—10
7. ஸ்ரீ ஆனந்த ஸாகரஸ்தவம் :—ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் ... 0—10

## ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

57, மேல டபீர் தெரு,
கும்பகோணம்.

4, ப்ரான்ஸிஸ் ஜோஸப் தெரு,
ஜார்ஜ் டவுன் சென்னை.

# புதுக் கீர்த்தனைகள்

[ஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி.எல்.]

வந்தவர் :—ச்ருதி மண்டலத்தின் நிலயம் இதுதானே.

ஸுச்ருதி :—ஆம். தாங்கள் யார் ?

வ :—நான் ஒரு ஸங்கீத அபிமானி. பிரஸிடெண்டு ஸர்வச்ருதி அவர்களை ஒருகாரியமாய்ப் பார்க்கவேண்டுமென்று வந்தேன். தாங்கள் யாரோ ?

ஸு :—நான் ச்ருதி மண்டலத்தின் வைஸ் பிரஸிடெண்டு. ஒரு ஸங்கீதத் தொழிலாளி. இன்று எங்கள் மண்டலம் கூடப்போகிறது. பிரஸிடெண்டும் மற்ற அங்கத்தினர்களும் ஒரு மணி நேரத்தில் வருவார்கள். இது என் வீடு. இங்கு தான் எல்லோரும் கூடுவது வழக்கம்.

வ : தங்கள் மண்டலத்தின் நடவடிக்கைச் செய்திகளை நான் ஆவலுடன் படித்து வருகிறேன். ஆனால் தங்கள் மண்டலம் ஸ்தாபிக்கப்பட்டு நான்கு வருஷங்கள் ஆகியும் நாலைந்து ரிபோர்ட்கள் தான் பிரசுரமாகியிருக்கின்றன வருஷத்திற்கு ஒருமுறைதான் கூடுகிறது போலிருக்கிறது.

ஸு :—நாங்கள் பிரதி மாதமும் கூடுகிறோம். எங்கள் பஜனைகளும் வம்புக் கச்சேரிகளும் இடைவிடாது நடந்து கொண்டுதா னிருக்கின்றன. ஆனால் நாங்கள் ரிபோர்ட்களை எழுதி அனுப்புவதும் பத்திராதிபர்கள் அவைகளை பிரசுரம் செய்வதும் ஒத்துமையாக நேருவது ஸுலபமாகவில்லை.

வ :—1940 அக்டோபரில் அரியக்குடி ராமாநுஜ ஐயங்காரைப் பற்றியும் 1943 அக்டோபரில் மதுரை மணியைப் பற்றியும் எழுதப்பட்ட உங்கள் குறிப்புக்களைப் பார்த்து நான் உங்கள் மண்டலத்தில் ஒரு விச்வாஸத்தை மேற்கொண்டு இங்கு இன்று வர நேரிட்டது.

ஸு :—உம், போன மாதத்தில்கூட ஒரு குறிப்பு அனுப்பியிருக்கிறோம். இருந்தாலும் எங்கும் உள்ள கோலாகலத்தில் எங்கள் த்வனி யார் காதில் விழப்போகிறது! எங்கள் பேச்சுக்களை நாங்களே ரஸித்துக் கொள்கிறோமே யல்லாது பிரசாரத்தில் எங்களுக்கு அவ்வளவு ஆதரமில்லை.

வ :—அப்படி யிருப்பது சரியல்ல. நல்லதை நாலுபேருக்கு இட்டல்லவா புசிக்கவேண்டும். இந்த ஸ்வல்ப பிரசாரத்தினாலல்லவா நான் உங்கள் மண்டலத்திற்கு நண்பனானேன். நாமறிந்த தத்துவங்களை உலகம் பயன் பெறுமாறு வெளியிடவேண்டும். அதுவே முறை.

ஸு :—தேசம், காலம், பாத்திரங்களை யனுசரித்து உதவவேண்டுமே அல்லாது வீணே வாரி யிறைத்தல் உசிதமாகாது. இப்போது ஸங்கீதப் பிரசங்கமும் ஸங்கீத வித்வத் பிரசம்ஸையும் ஒரு "பாஷன்" ஆகிவிட்டது. "பாலிடிக்ஸு" பேசி அலுத்துப்போனவர்களும் ஸங்கீத யோக க்ஷேமங்களை ரொம்ப கவனிக்க ஆரம்பித்துவிட்டார்கள். பொது ஜனங்களின் ஸுயேச்சை "டேஸ்" ஒத்திப் போடப்பட்டு அவர்களைக் களிப்பிக்கும் வழியை - ஸ்வர்க்க வாசலைப்போல் - திறந்து வைக்க ஊழியம் வலுத்து வருகிறது. இப்போது எங்களுக்குப் பேச என்ன அவகாசம் ?

வ :—தாங்கள் சொல்வது தப்பான அபிப்பிராயம். பொதுஜனத்தின் புதிய அறிவும், உணர்ச்சியும், ஆர்வமும் பெருகிவரும் இந்தக் காலத்தில் யாரும் அரிதான பொருள்களைத் தேடிச் செல்வதில்லை. பொருள்கள் இறைந்து கிடக்கின்றன. வேண்டுவோர் பொருக்கி எடுத்துக் கொள்வார்கள். எல்லாம் மலிந்த காலம் இது ; எல்லாம் பரந்து, விரிந்து விகஸிக்கும் காலம் இது. விஞ்ஞானம், சிற்பம், கவிதை, ஸங்கீதம்

முதலியனவெல்லாம், ஸப்த ஸமுத்திரங்களும் கூடியதுபோல், பேரெழுச்சி பெற்றுக் கொந்தளித்துக்கொண்டு நிற்கின்றன. இவைகளின் கரையையும் காணமுடியாது. ஆழத்தையும் நிதானிக்கமுடியாது. இவைகள் புரண்டோடுவது எத்திசையில் என்றும் நிர்ணயிக்க முடியாது. இக்காலத்தில் நீங்கள் கிணற்றுத் தவளைகளாகவில்லாமல் பொங்கும் ஸமுத்திரத்தில் கலந்துகொள்ள வேண்டும்.

ஸு:—தாங்கள் பேசுவது இந்தப் புரட்சிகளை ஆதரித்தல்லவா? இந்தக் காலத்தையே பிரளயகாலம் என்று பயத்துடன் நோக்கும் நாங்கள், மனுவின் ஓடத்தில் ஸப்தரிஷிகள் ஏறிக்கொண்டதுபோல், இம்மண்டலத்தைச் சேர்த்துக்கொண்டு ஒருபுறமாய் நடத்திக்கொண்டு போகிறோம். எங்கள் பிரஸங்கங்கள் எங்களுக்குள்ளேயே ஜீர்ணமாகி விடுவதுதான் மேன்மை.

வ:—இதைப் பிரளயமென்று நினைப்பது அறியாமை. அப்படியே வைத்துக்கொண்டாலும் அடுத்துவருவது க்ருதயுகமல்லவா?

ஸு:—இது அவாந்திர பிரளயம். மஹாப்பிரளயமல்ல. இக் கலியின் முதிர்ச்சியே இப்புரட்சிகளின் அறிகுறியாகும்.

வ:—நீர் ஸங்கீதக்காரராக விருந்து இப்படிப் பேசுவது எனக்கு வருத்தத்தையும் வியப்பையும் தருகிறது. மற்ற விஷயங்கள் எப்படியானாலும் தற்காலம் ஸங்கீதம், சாஸ்திர வழியிலும், அனுஷ்டானத்திலும், பெருமையையும், விஸ்தாரத்தையும், பலத்தையும், பொதுஜன ஆமோதிப்பையும் முன்னிலும் பன்மடங்கு அதிகமாய் அடைந்து வருகிறதென்பதை நீர் ஆக்ஷேபிக்க முடியுமா?

ஸு:—தாங்கள் எவ்வளவு அழுத்தம் திருத்தமாய் உரத்தக் குரலில் வாதம் செய்தாலும் என் பதில் ஒரே உறுதி உள்ளவனுடைய பதிலே. "ஆளைக்கண்டு மலைக்காதே ஊதுகணம்" என்று சொல்வதுபோல் இந்த முன்னேற்றம் முன்பாரம் அதிகமாகி மாட்டின் கழுத்தை இறுத்தும் முன்னேற்றம். வண்டி ஓடவேண்டுமானால் முன்னும் பின்னும் துல்யமாக விருக்க வேண்டும். மாட்டுக்கும் சிரமமில்லை. வண்டிக்காரனுக்கும் வேலை யில்லை. சவாரி செய்பவருக்கும் அபாயமில்லை. "ஸர்வம் பேச்சுமயம் ஜகத்" என்றாகி விட்டது. இன்னவர்தான் பேசுவது இன்னதைப் பற்றித்தான் பேசுவது என்ற வரைமுறைகளெல்லாம்மலையேறி விட்டன. எல்லாரும் பாடகர்கள்; எல்லாரும் விமர்சகர்கள்; எல்லாரும் ரஸிகர்கள். அதுமட்டுமல்ல. எல்லாரும் கீர்த்தனை கர்த்தாக்கள். ஸங்கீத மும்மூர்த்திகள் முப்பத்திமுக்கோடி மூர்த்திகளுக்குத் தங்கள் ஸ்தானங்களைக் காலி செய்ய காத்திருக்கிறார்கள். ஆனால் உங்களுடன் நான் வாதாடுவது வீண் காலக்ஷேபம். ஸர்வச்ருதியைப் பார்க்க வேண்டுமானால் தாங்கள் வேறு ஜோலிகளைப் பார்த்துக்கொண்டு கொஞ்ச நேரம் கழித்து வாருங்கள். எனக்கும் காரியமிருக்கிறது.

வ:—இல்லை. உங்களுடன் தான் பேசவேண்டும். உங்கள் பேச்சை நான் மிகவும் ரஸிக்கிறேன். ஸம்பாஷணையில் இருவரும் ஒரே நோக்கமுடையவர்களாக விருந்துவிட்டால் ஸ்வராஸ்யமில்லை. வெவ்வேறு நோக்கமுடையவர்களானால்தான் சூடு கொடுக்கும் பரஸ்பரம் பல பரீக்ஷையில் எதிர்பாராத அஸ்திர பிரயோகங்கள் ஸம்பவிக்கின்றன. நான் உம்மை இத்துடன் விடப்போவதில்லை.

ஸு:—நான் இதுமாதிரி ஒருவரிடமும் இதுவரை அகப்பட்டுக் கொண்டதில்லை. நல்லது இருக்கட்டும். எங்கே உம் அஸ்திர பிரயோகத்தை ஆரம்பியும் பார்க்கலாம்.

வ:—நீர் தாத்தா காலத்ததென்று பீத்தச்சால்வையைப் போர்த்திக்கொள்வது எனக்குப் பிடிக்கவில்லை. காலத்திற்கேற்ற கோலம் என்பதை உணராதிருக்கிறீர்.

ஸு:—தாத்தா காலத்தில் கரும்பைத் தின்றார்கள். நீர் இப்போது

நாணலைக்கடியும். தாத்தா காலத்தில் உத்ருபாணங்களைப் பூண்டார்கள். நீர் இப்போது குந்துமணியையும் கூழாங் கல்லையும் கட்டித் தொங்கவிட்டுக்கிறது தானே. தாத்தா காலத்தில் குதிரைக் குக் கொம்பில்லை. இப்போது கொம்பு முளைத்துவிட்டது! தாத்தா காலத்தில் பசுவின் பாலை அருந்தினர்கள். நீர் இப் போது கழுதைப்பாலைச் சாப்பிடுகிறீரா? தாத்தா காலத்தில் காலால் நடந்தார் கள். நீர் தலையால் நடவும். போங் காணும் போம். வீணில் என் வாயைக் கிளப்பாதேயும். ஏற்கனவே ஸா்ச்ருதி என்றால் ஒருவருக்கும் ஆகவில்லை. நல்ல வேளை ஸர்வச்ருதி வந்துவிட்டார். நான் தப்பினேன்.

வ:—நமஸ்காரம்.

ஸர்வச்ருதி:—உட்காருங்கள். தாங் கள் யார் தெரியவில்லையே. எங்களுக்கு இன்று மீடிங்கு ஜோலி அதிகமிருக் கிறது. அவசரக் காரியமில்லாவிட்டால் நாளைத் தங்களைப் பார்க்கிறேன்.

வ:—தங்கள் மீடிங்கில் கலந்து கொள்ள என்னையும் அனுமதிக்கக் கூடாதா?

ஸா:—போதும். வேறு வினை வேண் டாம். நல்ல வேளை முன்னதாகவே ஸ்வரூபத்தைத் தெரிவித்துக்கொண் டீரே!

வ:—அல்ல. நானும் ஸங்கீத அபி மானி. உங்கள் மண்டலத்தில் அங்கத் தினராக என்னையும் சேர்த்துக்கொள்ள லாம்.

ஸா:—இன்று மண்டலத்திற்கு மஹாப்பிரளயம் வந்துவிட்டார் போலி ருக்கிறது.

ஸ:—நாங்கள் பன்னிரண்டு பேர்கள் தான். அதிக அங்கத்தினர்களைச் சேர்க்க நாங்கள் உத்தேசிக்கவில்லை. தங்களை நாளை வரும்படி கேட்டுக் கொள்கிறேன். மன்னிக்கவும். நாழியாகிறது.

வ:—நான் யாரென்று தெரிந்தால் இவ்விதம் என்னை நிராகரிக்க மாட்டீர் கள்.

ஸா:—அதைத்தானே முதலிலேயே கேட்டது.

வ:—நான் அங்கிலா புரத்தில் தாசில் தாராகவிருந்து 1939 டிசம்பரில் "ரிடைர்" ஆனவன். என்னை மஹா தேவய்யர் என்று சொல்லுவார்கள். நான் வண்டிப்பேட்டை ஸோமேச்வர பாக வதரின் கொள்ளுப் பேரன். எங்கள் வம்சத்தில் தொட்டில் குழந்தை முதல் பாடும். என் பாட்டிக்குப் பல்லவி ஞான முண்டு. என் தாத்தா பரமேச்வர பாகவதருக்கு ஐயர்வாள், தீக்ஷிதர்வாள் கீர்த்தனமெல்லாம் நூற்றுக்கணக்காகப் பாடமுண்டு. பெரிய வித்வான்களெல் லாம் அவரிடம் கீர்த்தனைகள் எழுதிக் கொள்வார்கள். என் தகப்பனர் லௌகிக விருத்தியிலிருந்தார். நானும் இங்கிலீஷ் படிப்பில் இறங்கிவிட்டதால் பரம்பரை ஸங்கீதம் கத்தரித்துப்போய் விட்டது. ஆனாலும் எனக்கும் குல வித்தையின் தொடர்பு கொஞ்சம்உண்டு.

ஸா:—எப்படி?

ஸ:—எவ்வளவோ பெரிய உத்யோ கஸ்தர்கள் ஸங்கீதத்தில் வித்வான்க ளாகவிருக்கிறார்கள். அவர்கள் எங்கள் தொழிலில் எங்களுடன் போட்டிக்கு வந்துவிட்டால் நாங்கள் எல்லோரும் எங்கேயாவது ஓடிப்போக வேண்டியது தான். அத்தகையோர் எங்கள் தொழி லில் போட்டிக்கு வாராததுடன் எங்கள் தொழிலை எங்களுக்குக் கௌரவமாக நடத்திவைத்து எங்களை அபிமானித்து வருகிறார்கள் என்பதை நாங்கள் நன்றி யுடன் ஸ்மரிக்கவேண்டும்.

ஸா:—வந்து பார்க்கட்டுமே போட் டிக்கு.

தாசில்தார்:—நீங்கள் சொல்வது விநயமான வார்த்தை. பிரமுகர்கள் பொழுதுபோக்கிற்காக வளர்த்துவரும் ஸங்கீதப் பயிர்ச்சி ஸபைக்கு உதவாது. அவர்கள் ச்ரோதாக்களாகஇருப்பதற்கு உத்தமாதிகாரிகளே ஒழிய தங்கள் ஞா னத்தைப் பிரயோகத்தில் பயன்படுத்த முடியாது. நானும் அத்தகையோனே என்றாலும், என்னுடைய கவிதா சக்தி

யால் உங்களுக்கு நான் நெருங்கிய உறவினனாகிறேன். நான் இயற்றியுள்ள க்ருதிகள் பல. அவைகளுக்கு இசையும் அமைத்திருக்கிறேன். அவ்விசைகளைத் திருத்தம் செய்து ஸ்வரப்படுத்தித் தானக்குறிப்புகளுடன் நன்கு அமைத்துத் தரும் ஸங்கீதப் பணிவிடையை இம்மண்டலம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தாழ்வுடன் தெரிவித்துக் கொள்வதற்கே நான் இன்று இங்கு வந்தேன்.

ஸ் :—ஓஹோ, நல்ல யோசனை. எங்களுக்கு வேறு ஜோலி யில்லைபோலிருக்கிறது. "மெள்ள மெள்ள வந்தாலும்" என்று ஒரு பழமொழி உண்டு. இப்படிப்பட்ட பெரிய மனுஷ்யாள் ஆதரவு எங்கள் மண்டலத்திற்கு இல்லாதவரையில் க்ஷேமம். ஓய், தாசில்தாரே! ஒரு கீர்த்தனத்தை ஸ்வரப்படுத்த எவ்வளவு ரூபாய் கொடுப்பீர்?

தா :—உங்களை ச்ருதி மண்டலம் ஸங்கீத பிரசாரத்தை முக்கிய நோக்கமாக உடையதானால், இப்புதிய கீர்த்தனங்களை நீங்கள் ஆவலுடன் வரவேற்றுப் பாடம் செய்து, ஸபைகளில் பாடி, சிஷ்யர்களுக்குக் கற்பித்துக் கீர்த்தனை கர்த்தாவுக்குக் கீர்த்தியைக் கைம்மாறாக அளிப்பதே தகும். இக்கைங்கரியத்திற்குக் கூலி கேட்பது உங்களுக்குத் தகுதியல்ல.

ஸ :—என்ன பாஷையில் உங்கள் கீர்த்தனங்கள்?

தா :—எனக்கு ஸம்ஸ்கிருதம், தெலுங்கு முதலிய பாஷைகள் தெரிந்திருந்தும் காலத்தை அனுசரித்துத் தமிழிலேயே க்ருதிகளை இயற்றி யிருக்கிறேன்.

ஸ :—நான் அப்போதே நினைத்தேன்.

ஸ :—ஐயா, தங்களைப்போல் பலபேர்கள் எங்களிடம் மனுச்செய்துகொண்டிருக்கிறார்கள். குவியல் குவியல்களாகக் கீர்த்தனைகள் இந்தக் கடிதாசு கிராக்கி காலத்திலும் வந்து கிடக்கின்றன. அவைகளைப் பரிசீலனை செய்யவே இன்று அவசரக் கூட்டம் நியமிக்கப்பட்டது. தங்களுடைய க்ருதிகளையும் கொடுத்துவிட்டுப் போனால் நாங்கள் பார்வையிட்டுக் கூடிய சீக்கிரத்தில் எங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறோம். தாங்கள் இதற்காக இங்கு தாமதிக்க வேண்டிய அவசியமில்லை.

தா :—நானே பாடிக் காண்பிக்க நேரில் வந்திருக்கும்போது என் க்ருதிகளை மற்றவர் க்ருதிகளுடன் சேர்த்துப் பரிசீலனைசெய்ய அவசியமில்லை. மேலும் என் க்ருதிகள் பலவிடங்களில் பரிசு பெற்றவை. சில வித்வான்கள் இவைகளைப் பாடியும் வருகிறார்கள். இச் ச்ருதி மண்டலத்தின் ஆமோதிப்பை வேண்டி நான் இங்கு வந்தேன். உங்கள் அங்கீகாரத்தினால் இவைகட்குப் பெருமை உண்டானால் பின்பு இவைகளை அச்சிட்டு வெளிப்படுத்த செளகரியமாயிருக்கும்.

ஸ :—உங்கள் செளகரியத்தைப்பற்றியே பேசிக்கொண்டிருக்கிறீரே. நாங்களெல்லாம் கீர்த்தனம் எழுதத் தெரியாமலா எழுதாமலிருக்கிறோம்? "ஹும்; பட்; வசி; மசி;" என்றெல்லாம் மந்திரங்கள் இருக்கின்றன. அவைகளால் பிசாச உச்சாடனம், விஷசமனம் முதலிய காரியங்கள் நடைபெறுகின்றன. நானும், "உர்; டர்; ஊசி; நாசி;" என்றெல்லாம் மந்திரங்களைக் கல்பனை பண்ணினால் பிசாசங்களும் பாம்புகளும் கட்டுப்படுமா? அருள்பெற்ற மஹான்கள் பேரின்ப நிலையிலிருந்து, மஹரிஷிகள் மந்த்ரங்களைப் பார்த்ததுபோல், கீர்த்தனைகளைப் பார்த்தார்கள். தியாகய்யர் முதலிய பெரியோர்கள் இன்ன ராகத்தில் இன்ன கீர்த்தனை "பார்த்திருக்கிறார்கள்" என்று சொல்வது வழக்கமே ஒழிய கீர்த்தனம் "போட்டிருக்கிறார்கள்" என்றாவது "இயற்றியிருக்கிறார்கள்" என்றாவது "எழுதியிருக்கிறார்கள்" என்றாவது சொல்லுவதில்லை என்ற ரகஸ்யத்தை உமயாள்புரம் சாமி ஐயர் முதலிய பக்த சிகாமணிகளான ஸங்கீத வித்வான்களிடம் ஸம்பாஷித்தவர்கள் அறிவார்கள். அப்படிக்

கீர்த்தனம் "பார்த்தவர்கள்" அமிர்தத்தை தேவலோகத்திலிருந்து கருடன்கொண்டு வந்ததுபோல் ஆனந்தக் கனிகளைக் கொண்டு வந்து அன்பால், கருணையால், மானிட உலகத்திற்கு உதிர்க்கிறார்கள். அவர்களுக்கிடையில் "கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி" என்றவாறு நாமும் கீர்த்தனை கர்த்தாவென்று மார் தட்டிக்கொள்வதா? அப்பெரியோர்களின் பாத தூளிகளை சிரமேற்கொண்டு பக்தியால் மனம் கனிந்து அவர்களின் க்ருதிகளை பயத்துடனும் சிரத்தையுடனும் நாம் பாடிவந்தோமேயானால் இஹத்திற்கும்பரத்திற்கும் ஆகும். இல்லையேல் திரிசங்கு ஸ்வர்க்கம்தான்.

தா :—அப்பெரியோர்களும் நம்மைப் போல் மனிதர்கள்தானே? அவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? அவர்கள் காலத்திலும் உம் போன்றவர்கள் அவர்களைத் தூற்றிக்கொண்டிருந்ததாய்த்தான் தெரிகிறது. பெரியோர்களின் பிறப்பே போன நூற்றுண்டுடன் அத்துப்போய் விட்டதென்று வாதாடும் உம் போன்றவரின் பேதமை பரிதாபமே. ஈச்வர சிருஷ்டியின் சிறப்பை அணைபோட்டு மறிக்க யாரால் முடியும்? காலம் முற்ற முற்ற சிருஷ்டித்தொழில் சிறப்படைந்து வருகிறது. இப்படி புத்தியில்லாமல் பழசே பெரிது என்று ஓலமிட்டுக்கொண்டிருந்தால் உமக்கு இஹத்திலும் இல்லை பரத்திலும் இல்லை. திருசங்கு ஸ்வர்க்கம்தான். நான் உறுதியாகச் சொல்வேன்.

ஸு :—ஓய்! தாசில்தாரே! நீர்தான் தியாகைய்யர். நான்தான், ஜப்யேசன். கொண்டுவாரும் உம் சுவடியை ஆற்றில் தூக்கிப் போடுகிறேன். "எந்துதாகினுடோ" "எங்கு ஒளிந்தனையோ" என்று பாடும். சுவடி வருகிறதா என்று பார்ப்போம்.

தா :—நீர் இக்கதைகளை நிஜமென்றே நம்புகிறீரே. தியாகய்யர் ராமபக்தர் என்பதை நிரூபிக்க இக்கட்டுக்கதைகள் புறப்பட்டன வென்று தத்துவத்தைத் தெரிந்துகொள்ளாமல் இவ்வளவு வயதாகியும் மூடநம்பிக்கையை வளர்த்து வருகிறீர்.

ஸு :—ஓய்! "மூடநம்பிக்கை" என்பதை இரண்டாய்ப் பிரியும். பாதி உமக்கும் பாதி எனக்கும் இருக்கட்டும். நம்பினவன் ஒரு நாளும் கெட்டுப்போக மாட்டான். "கத்தன வாரிகி கத்து க்த்து" - "உண்டு என்றவருக்கு உண்டு உண்டு" என்றார் தியாகய்யர்.

தா :—இல்லை. அது "நேடபத்தமு" 'அந்த வார்த்தை இன்று பொய்யாகி விட்டது" என்றல்லவா சொல்லுகிறார்.*

ஸ :—ஐயர்வாள், பரஸ்பரம் இந்த விதண்டாவாதம் வேண்டாம். தாங்கள் மிக்கப் பெரிய யோக்யதை யுடையவர்கள் என்று தங்கள் ஸம்பாஷணையிலிருந்து வெளியாகிறது. இவ்வளவு கல்வித் திறமும், சொல்திறமும், ஸங்கீதஸாஹித்யத்திறமுமுடைய தாங்கள், இருக்குமிடம் விளக்கேற்றிப் பார்க்கும்படி அவ்வளவு சிற்றறிவுள்ள சிறியோர்களான எங்களை கௌரவப் படுத்த எண்ணியதற்கு நாங்கள் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். தங்கள் க்ருதிகளைக் கேட்டு நாங்கள் க்ருதார்த்தர்களாகும்படி செய்யவேண்டும்.

ஸு :—ஸர்வச்ருதி! நீயே கேட்டு க்ருதார்த்தனுவது பற்றி எனக்கு ஆக்ஷேபணையில்லை. நான் சற்றுக் கடைவீதி வரையில் போய்வருகிறேன். மருந்து ஷாப்பில் தலைவலிக்குத் தைலம் வாங்கிவர வேண்டும். (போகிறார்)

ஸ :—ஐயர்வாள்! ஸுச்ருதி அண்ணு இல்லாவிட்டால் ஒன்றும் ஸ்வாரஸ்யப் படாது. நாங்கள் எல்லாம் அவர் பலத்தைக்கொண்டே இந்த ச்ருதி மண்டலத்தை நடத்தி வருகிறோம். அவர் கோனேரி ராஜபுரம் வைத்திநாதய்யரிடம் சிஷ்யராகவிருந்து பெரிய யோக்யதையை ஸம்பாதித்துக் கொண்டவர். பேச்சில் வெகுளியே ஒழிய ஹ்ருதயம் பரிசுத்தமானவர். தங்கள் க்ருதிகளைக்

---

*குறிப்பு: உண்மையில் "அந்த வார்த்தை இன்று பொய்யாகி விடுமா" என்று தான் தியாகய்யர் சொல்லியிருக்கிறார்.

கொடுத்துவிட்டுப் போனால் எங்கள் மீடிங்கில் அவைகளை விமர்சிக்கிறோம். அடுத்தவாரம் சௌகரியப் பட்டால் தாங்கள் வரவேண்டும். எங்களிடம் கீர்த்தனைகளை அனுப்பியவர்கள் எல்லோரையும் வரும்படி சொல்லப் போகிறோம். நேரில் பாடியும் கேட்டு எங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தா :—பேஷ், நல்ல யோஜனை. நான் அவசியம் வருகிறேன். வெற்றிபெற்றவர்களுக்கு உங்கள் மண்டலத்தின் வாயிலாக ஒரு பட்டம் வழங்கவேண்டும்.

ஸ :—அதற்கென்ன, செய்யலாமே.




நடந்த வருஷத்தில் 100% அதிகமானது
நாஷனல்
இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.
மதராஸ் பிராஞ்சு :—362, சைனா பஜார் ரோட், எஸ்ப்ளனேட், சென்னை.
இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் கிளை ஆர்கனைசேஷன் & பிரதம ஏஜென்ஸி காரியாலயங்கள்




அத்தியாயம் - 2

# கிராமத்தில் குடியேறியதும்

[ஸ்ரீ டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம். ஏ., எல். ஐ. எம்.]

கணேச சாஸ்திரிகள் குடும்ப சகிதமாக தலையூரில் குடியேறியபொழுது அவர் கொண்டுவந்த முதல் அவருடைய வைராக்கியமும் தொழிலின் திறமையும் சிறிது காலம் யோக க்ஷேமத்திற்கு வேண்டிய அவசியமான பொருள்களுந்தான். கர்மயோகியாகவே காலம் கழித்தவர் தான் கிரகஸ்தர் என்ற ஞாபகத்தை இழக்காததினால் இவ்வளவு ஏற்பாடுகளுடனாவது வரமுடிந்தது. ஜனங்கள் எவ்வளவுதான் அவரை முதலாளியாக இருக்கலாமென்று எண்ணியபோதிலும் அவர் நிம்மதியாக தன் சக்திக்கியன்ற ஒரு கூரை குடிசையைத் தன் மனையில் வாசத்திற்கு அமைத்துக்கொண்டார். அவர் சகதர்மிணி வசுந்தரை அம்மாளும் பானை பிடிக்கிறவள் பாக்கியமென்று குடித்தனம் நடத்தத் துவங்கி விட்டாள். மட்கலயங்களையும் மர அகப்பை முதலியவைகளையும் வைத்துக்கொண்டு குடித்தனம் செய்வதை ஒரு அகௌரவமாகவே அவள் நினைக்கவில்லை. பொன்னும் மணியும்போல் அவர்களுக்கானந்தத்தையும் வீட்டிற்கலங்காரத்தையும் கொடுத்தனர். அவர்களுடைய இருகண்கள் போன்ற பொன்னம்மாளும் சுப்ரமண்யமும். அவ்வெட்டு வயது சிறுமிக்கு இப்புது மாறுதல்களும் ஓர் ஆனந்தத்தையே கொடுத்தன. தன் பெற்றோர்களும் தன் ஆறு வயது தம்பியும் பக்கலிலிருக்கையில் எவ்விடத்திலும் ஆனந்தத்தைத் தவிர வேறு எதைக் காணும் அக்குழந்தையினுள்ளம்!

வந்த புதிதில் ஊராரின் விருந்தும் உபசாரமும் சில நாட்களைக் குதூகலத்துடன் கழிக்க உதவியது. அவரவர்களும் இவர் முதலாளி இல்லை என்பதைக் கண்டுகொண்டதும் சிறிது சிறிதாக தங்கள் அலுவல்களைக் கவனிக்கும் பாவனையாக சாஸ்திரிகளைத் தேடி வருவதையோ கண்டதும் சம்பாஷணையில் இறங்குவதையோ அடியோடுவிட்டு விட்டார்கள். இப்படி ஏகாந்தத்தை ஏகபோகமாக இவர்களுக்கே வழங்கியதின் பலன் இக்குடும்பத்தினருக்குக் கிராமவாசத்தில் ஒரு சலிப்பை உண்டாக்க வழிகோலியது. குழந்தைகளுக்கு ஏதாவது சாக்குபோக்குக்கள் சொல்லிப் பராக்குக் காட்டியே நகர மோகத்தைத் துலைத்து விட்டார்கள். ஆனால் இந்தச் சிகித்சை இவர்களுக்கே பயன்படவில்லை. பயன்படாதுதான். குழந்தையுள்ளங்கள் கலங்கமடைய வயது வாராத காரணத்தினால் படிப்பின் உதவி இல்லாமலேயே "கிட்டாதாயின் வெட்டென மற" என்ற வாக்கியத்தை பூர்வ ஜன்மத்தின் வாசனையினாலோ என்னமோ நடைமுறையில் கொண்டு வந்து விட்டன. ஆனால் இந்த வயது வந்த அனுபோகமிகுந்த தம்பதிகள் மட்டும் வைராக்கியத்துடன் வாக்கியார்த்தத்தைக் கடைப்பிடிக்கச் சாதனமாக "மறப்பதெப்படி" என்ற வரலாறு எந்த புஸ்தகத்திலாவது இருக்கிறதா என்று ஆராய்வதில் இறங்கிவிட்டார்கள். இவர்களின் குதூகலம் தினம் தினம் குறைந்துகொண்டே வந்தது.

பொருமைக்கோர் உதாரணம் போன்ற வசுந்தரையம்மாள் தன் ஏமாற்றங்களுக்கும் பொருமையாக இருக்கும் சிக்ஷையை அளித்துவிட்டவள்போல் யாதொரு குறையும் சொல்லாமல் தன் நித்ய கர்மாக்களைச் செய்துகொண்டு போனாள். எல்லா விக்னங்களையும் களையவேண்டி பூஜை செய்யப்படும் கணபதிக்கே விக்னம் வந்தால் என்ன செய்வது என்பதைப்போல் கணேச சாஸ்திரிகளும் தன் குதூகலக் குறைவை ஏகாந்தத்தில் தன்னுள்ளேயே அடக்கினார். சதிபதிகளிருவரும் கிராமவாசத்தின் ஆரம்ப ஏமாற்றத்தைக் குறித்து ஓர் வார்த்தைகூட பரமாரிக் கொள்ளவில்லை. ஏன்? பொய் கௌரவம் என்று அடிக்கடி நாம் யோசனை இல்லாமலேயே கரிக்கும் சங்கோசமாகிற நன்றியுள்ள நாய்தான் விரதத்தினின்றும் தவருதீர்கள் என்று வெற்றியுடன் ஞாபகப்படுத்தும் காவலாளி. கடமையைக் கைவிடத் தயங்காதவர்களையும் சிறிது காலம் தேக்கி வைத்து உய்யமாட்டார்களா வென்று கருணையுடன் நோக்கும் உண்மையின் ஊழியன் இது. ஆகவே எவ்வாறு ஒருவருக்கொருவர் விரதத்தினின்றும் நழுவ சபலம் ஏற்பட்டதைச் சொல்லிக்கொள்ளுவது என்ற வெட்கம் இந்த அன்யோன்ய தம்பதிகளைக்கூட தடுத்தாட்கொண்டது. அந்த சமயங்களில் எல்லாம் வைராக்கியத்துடன் விரதத்தைப்பற்றியே பேசிப்பேசி உள்ளே இருக்கும் சஞ்சலத்தை மறைக்க முயன்றது, முடிவில் மறக்கவும் உதவியது.

இவ்விதம் ஓர் வைராக்கியத்தினால் இயக்கப்பட்ட சாஸ்திரிகள் கிராமத்தில் தனக்கு ஏற்பட்டிருக்கும் பெரும் பொருப்புக்களில் மனத்தை ஈடுபடுத்தினார். வீண் வம்புகளில் கலந்துகொள்ளவில்லை. பொழுது போக்கிற்காக யாருடனாவது பேசவேண்டும் என்ற சபலத்தையறவே யொழித்தார். தன் காரியங்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார். யாருடனும் மிதமாகவும் ஹிதமாகவும் பேசப் பயின்றார். சில நாட்கள் வரையில் கிராம ஜனங்கள் இவரை ஏளனமாகவே நோக்கிய போதிலும் ஒவ்வொருவராக இவரை ஓர் லக்ஷிய புருஷர் என்று மதிக்க ஆரம்பித்துவிட்டார்கள். வீண் கால விரயம் செய்வதற்காக இவரை நாடக்கூடாதென்றறிந்து கொண்டார்கள்.

சதாசிவன் தினந்தோறும் சாஸ்திரிகளைத் தூண்டி வயல்களுக் கழைத்துச் செல்வான். நிலத்தின் தத்துவங்களை அவனுடைய அனுபவங்களுடன் விளக்கிக் கூறுவான். சாஸ்திரிகளும் காலம் கடந்து படிக்க ஆரம்பிக்கும் பிள்ளைகளைப்போல் விஷயங்களைச்சுலபமாகவும் ஆர்வமுடனும் கிரகித்தார். நஞ்சை என்றால் அதிக வரி கொடுக்கப்படும் நிலம். புஞ்சைக்கு லக்ஷணம் வரிக் குறைவு என்றே இதுகாறும் பாகுபாடு செய்து வந்திருந்த மனதினின்றும் இந்த அஞ்ஞானத்திறை வெகு சுலபத்தில் விலகி நீர் வலத்தைப் பொருத்தது நஞ்சை புஞ்சை என்ற பாகுபாடுகள், வரியின் வித்யாசத்தினாலில்லை என்ற சித்தாந்தம் பளிச்சென்று இவர் மூளையில் உதித்தது. இவ்வளவு எளிதில் அடிப்படை ஞானம் பெறவே ஆனந்தத்தின் பிரவாகத்தைக் சேழ்க்க வேண்டுமா? அடுத்தப் பருவ காலத்திற்குள் விவசாய இலாகா அதிகாரிகளெல்லாம் சாஸ்திரிகளின் நண்பர்களானார்கள். சாஸ்திரிகள் விஷயங்களை சுலபத்தில் கிரகித்துப் பிறருக்குப் போதிப்பதிலும்கிரியாம்சையில் செய்து காட்டுவதிலும் சமர்த்தரானார். இலாகா அதிகாரிகளும் தெய்வாதீனமாய்த் தங்களுக்குக் கிடைத்த கௌரவ ஊழியரை வஞ்சனையில்லாமல் ஸ்தோத்திரம் செய்து தங்கள் பாரத்தைச் சிறுகச்சிறுக சாஸ்திரிகள் தலையில் சுமத்திவிட்டதாக ஆனந்தப்பட்டார்கள். அவரிடத்தில் ஓர் பிரியமும் கொண்டார்கள். உண்மை ஊழியன் விரும்புவது ஊதியமில்லை; சேவைக்கேற்ற சந்தர்ப்ப சௌகரியங்களே. சிருஷ்டியும் இவர்களுக்கு அனுகூலமாகவே மனித சுபாவங்களை வகுக்கிறது. பாருங்கள் இந்த அதி

காரிகளின் போக்கை. த்ரிகரண சுத்தியுடன் கர்மயோகியாகப் பாடுபட விரும்பினார்களேயாகில் உண்மையில் ஜனங்களுக்கு க்ஷேமமே. சாஸ்திரிகளின் ஒத்துழைப்பும் பயன்படும். அப்படிக்கின்றி ஊதியத்தில் குறியாக வேலையை மட்டும் கழித்துக் கட்டும் சுபாவமாக இருந்தார்களேயானால் பொதுஜனங்களுக்கு இவர்கள் காரியம் பயன்படாதுதான். இவ்விதம் பல இலாகாக்களிலும் அதிகாரிகள் மிளிர்ந்து விட்டால் அவர்களை நியமித்துப் பராமரிக்கும் அதிகாரம் படைத்த சர்க்கார்சிரத்தை எடுத்துக்கொண்டாலொழிய ஊழல்கள் விருத்தியாகும். இவ்வித நிலையில் ஜனங்களுக்காக உண்மையிலுழைக்க சர்க்கார் முன் வந்தாலொழிய நாம் என்ன செய்யமுடியும் என்று ஏங்குகிறார்கள் வெகுபேர்கள். உண்மைக் குழைப்பவர்களுக்குக் காலமில்லை இது என்று ஓர் பெரிய தத்வத்தைக் கண்டுபிடித்துவிட்டதாக ஒரு பெருமூச்சுவிட்டு வாளாவிருக்கிறார்கள். இவர்களறியாமையை என்னவென்று சொல்லுவது. உண்மை ஊழியன் எப்பொழுதும் உழைக்க முடியுமென்பதை சாஸ்திரிகளின் அனுபவத்தைப் பார்த்தாவது அறியலாம். இந்த கர்மயோகியின் சங்கம் கிடைத்த மாத்திரத்தில் இவ்வதிகாரிகள் எவ்வளவு ஆனந்தத்துடன் கர்ம தர்மத்தை இவரிடமே ஒப்புவித்துவிட்டார்கள்! விழித்துக்கொண்டு இக்காரியாதிகளைத் தாங்களே மறுபடியும் செய்ய ஆரம்பித்துவிடுவார்களோ என்று ஐயமுற வேண்டாம். விழிப்பென்பது உண்மை யோகிக்கே. அப்படி அதிகாரிகள் உண்மை யோகியாகவே காரியாதிகளைச்செய்யவிழைந்துவிட்டால் க்ஷேமம் தானே ஏற்பட்டுவிடும். ஏதோ சாஸ்திரிகளை ஏமாற்றிவிட்டதாகப் பெருமிதப்புக் கொண்டு செல்லும் இம்முதலாளி மனம் படைத்த அதிகாரிகளுக்கு உண்மை விழிப்பேது? ஒரு வேளை இச் சத்சங்கத்தினால் ஏற்பட்டால் பகவதனுக்ரகம் என்று கொள்ளவேண்டும்.

சாஸ்திரிகளின் முன்னோர்களின் காலம் முதல் சதாசிவனின் முன்னோர்களின் காலமும் தொடர்ந்தே வந்திருக்கிறது. அவசியம் நேர்ந்த போதெல்லாம் இவர்கள் கூட்டுறவும் பரம்பரை தர்மமாக பரிணமித்து வந்ததென்று கூறுமலே விளங்கும். சுவாதீனத்துடன் சாஸ்திரிகளுக் குபதேசம்கூட செய்ய உரிமை பெற்றிருக்கும் சதாசிவன் கவடில்லாமல் விச்வாசத்துடன் விஷயங்களை விளக்கி வந்தான். விவசாயத்தின் பல அம்சங்களையும் குறைந்த காலத்தில் வெகு சுலபமாக அறிந்துகொண்ட சாஸ்திரிகளின் மூளையில் ஒரு பெரும் கிளர்ச்சியே ஏற்பட்டுவிட்டது. புஞ்சை பயிரை முக்கியமாக செய்வதா நஞ்சைப் பயிரை அக்கரையுடன் கவனிப்பதா என்று ஆலோசனை அவசியமாகப்பட்டது. ஏராளமாக பூஸ்திதியும் ரொக்கமும் உள்ளவர்களுக்கு இவ்வித ஆலோசனைகள் தோன்றவே தோன்றாது. போதும் போதாதுமாக உள்ள ஸ்வல்ப சொத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கையை நடத்த விரும்பும் லக்ஷ்ய புருஷர்களுக்கு இவ்வாராய்ச்சிகள் முக்கியம். நஞ்சையில் நெல் சாகுபடியைவிட கரும்பு சாகுபடி பன்மடங்கு அதிக பலனைத் தரும். புஞ்சை தானியங்களிலும் பலன் வெகு தாரதம்யத்தைக் காட்டும். எதைப் பயிர் செய்தால் அதிகப் பணம் கிடைக்கும் என்று செய்வதா அல்லது எவைகள் கட்டாயம் பயிரிடப்பட வேண்டும் என்ற யோசனையிலிறங்குவதா? சாஸ்திரிகள் பணத்தைப் பிரதானமாகக் கருதி இருந்தால் மாகாணத் தலை நகரில் தொழிலில் உன்னத நிலையிலிருந்த பொழுதே பணத்தை நன்கு குவித்திருக்கலாம். பணமும் அளவிற்கு மிஞ்சினால் பாஷாணம் என்ற கொள்கையை கடைப் பிடித்தவர் இப்பொழுது மாறி விடுவாரா? ஒருக்காலும் பணத்திற் கடிமைப்படமாட்டார். பணத்தை அடிமைக்கொள்ள வேண்டுமென்ற உறுதியினின்றும் தளரவில்லை. அவசியத்திற்கு வேண்டிய சிறிதளவு பணமும் இச்சாகுபடியின் மூலம்

கிடைக்கப் பெறாவிட்டால் சேவை பாதையுறாதா என்ற விஷயத்தைத்தான் ஆலோசித்தார். இச்சிறு தொகைக்கு ஈடு செய்ய என் நகரத்தில் செய்து வந்த தொழிலை ஊன்றுகோலாகக் கொள்ளக்கூடாதென்று யோசனை செய்தார். நிலம் பாடுபட்டு உழைத்துக் காட்டுவதற்காக இருக்கட்டுமே என்று சபலப்பட்டார். உடனே சந்தேகம் தட்டியது. இவ்வாறு பணத்திற்கு ஓர் தொழிலும் பிரசாரத்திற்காக மற்றொரு தொழிலும் வைத்துக்கொள்ளுவது சரியான மார்க்க தரிசனமா என்று. பணத்திற்காக கால விரயம் செய்து ஒரு தொழிலை எடுத்துக் கொள்ளுவதைவிட ஏற்கெனவே நிறைய இப்பணத்தை மீத்திருக்கலாமே என்ற ஓர் அசட்டுப் பச்சாதாபம் ஒரு க்ஷணம் இவரைக் கலக்கியது. எல்லா தர்மங்களையும் விட்டுவிட்டு என்னையே சரணடை என்று பகவான் என் சொன்னார் என்று அடுத்த க்ஷணம் ஆலோசித்தார். உடனே தீர்மானத்தை யடைந்தார். தொழில் பணத்திற்காக செய்யப்படுவதில்லை. பகவான் ஸேவைக்குக் காட்டிய வழி. ஆகவே எல்லாத் தொழில்களும் எல்லாவிடங்களிலும் எக்காலத்திலும் செய்யப்பட வேண்டியவைகளே. அதனால் ஊதியம் கிடைத்தால் பகவதனுக்ரகமாகக் கொண்டும் மேலும் மேலும் ஒவ்வொருவரும் கடைத்தேறும் வழியைத் தேட வேண்டியவர்கள். இப்படிக்கின்றிப் பணத்தை லக்ஷியமாகக்கொண்டு செய்யும் தொழில்களெல்லாம் உண்மையில் மனிதனின் சுதந்திரத்தைப் பறித்து பணப் பிசாசிற்கு இவன் ஆன்மாவை யடிமை யாக்கிவிடும். இப்பணமாகிற பூதத்தை அடிமையாக்கி ஈசுவராராதனத்தில் ஈடுபட முயலுவதே உண்மை தொழில். பூஸ்திதியும் சிறிது இருப்ப


அமிர்தாஞ்சன் லிமிடெட்

மதராஸ்

பொன் விழா ஞாபகார்த்தமாய் தங்கள் அன்பு மிக்க




ஆசி மொழிகளை எங்களுக்கு அனுப்ப வேண்டுகின்றோம்

அமிர்தாஞ்சன் லிமிடெட்

7, தம்பு செட்டி தெரு, மதராஸ்

தால் வியவசாயமும் செய்யப்பட வேண்டும் இவ்வித மனோபாவத்துடன் தன் தொழிலாகிய வைத்தியத்தையும் கிராமத்தில் செய்யத் தீர்மானித்துவிட்டார். இவருடைய யோக க்ஷேமத்தைப் பகவான் வகிக்கிறார். நஞ்சை புஞ்சைகளில் எந்தெந்த பயிர்கள் அமைந்தனவோ அவைகளெல்லாம் சிரத்தையுடன் பயிராக்கப்பட்டன.

வீட்டிற்கு வேண்டிய நெல், துவரை, உளுந்து, பயறு, மிளகாய், மல்லி, கடுகு, மஞ்சள், இஞ்சி, வெல்லம், எள், காய்கறிகள் முதலிய சகல வஸ்துக்களும் நிலத்திலேயே பயிர்செய்து பலன் அடைந்து வந்தார். யாராவது இந்த வருஷம் மிளகாய் மிக்க விலை ஏற்றம் ஆகவே எல்லா நிலத்திலும் மிளகாயே சாகுபடி செய்துவிடுங்கள் என்று கூறினால் மற்ற தான்யங்களுக்கென்ன செய்வது என்று கேட்பார். இம்மிளகாயை விற்று வரும் பெருந்தொகையைக் கொண்டு வாங்கிக்கொள்ளலாம் என்ற பதிலை ஏற்கமாட்டார். அப்படியானால் இம்மிளகாயுந் தானெதற்கு? வைத்தியத்தில் வரும்வூதியத்தையே பெருக்கினால் போதாதோ என்று மடக்குவார். இவர் சொல்லுவதில் ஆழ்ந்த உண்மை இருக்கிறது. வழக்கம்போல் சகல தானியங்களும் சாஸ்திரிகளின் நிலத்தில் பயிராகி வந்தன. பணப்பயிர் என்று ஒரு பயிர் அவரை ஆட்கொள்ளமுடியாது. எல்லாம் அவசியப் பயிர்களே. பூசாரம் அதிகமானதன் காரணமாக அதிகமாக விளைந்துவிட்ட பயிர்கள், தேவைக்குப் போக மீதி, விற்கப்பட்டு, தேவைக்குக் குறைவாக விளைந்த மற்றப் பயிர்களை வாங்கக் கிராமத்திலேயேகூடுமானவரையில் செலவழிக்கப்படும். இப்பணம் போதாவிட்டால் தன் தொழிலிலிருந்து கிடைக்கும் ஊதியத்தினால் ஈடு செய்வார். ஒவ்வொரு செலவும் கட்டாயம் ஏற்படும் என்று தோன்றியவுடனே அச்செலவிற்கென்று ஏற்பாடுகள் செய்து சிறிது தொகையை ஒதுக்கியும் வைப்பார். இன்ஷ்யூரன்ஸ் மூலமாயும் க்ஷேம நிதியை ஏற்பாடு செய்யத் தயங்கமாட்டார். எல்லாம் பகவான் தாங்குகிறானென்பது வாஸ்தவம். ஆனால் இவ்வாறு ஏற்பாடுகளைச்செய்யென்று இடம் பொருள்களைக் கொடுத்து புத்தியையும் புகட்டுவது பகவானின் லீலை என்று ஏன் கொள்ளக்கூடாதென்று யோசித்துக் காரியாதிகளை வகுப்பார். இதற்கு மேலும் தங்கிவிடும் தனத்தை பகவான் அப்பொழுதைக் கப்பொழுது ஆக்ஞை இடும் செலவுகளுக்கான தர்மசொத்தாகப் பாவித்துச் சேவையிலீடுபட்டார்.

(தொடரும்)

## இந்தியாவுக்கு அமெரிக்க காளைகள்

முன்பெல்லாம் இந்தியாவிலிருந்து உயர்ந்த மாடுகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டனவென்று கேட்டிருக்கிறோம். ஆனால் இப்பொழுதோ அமெரிக்காவிலிருந்து அவைகளை இறக்குமதி செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது! இங்கு பால் கொடுக்கும் பசுவினத்தை அபிவிருத்தி செய்ய ஆறு அமெரிக்கக்காளைகள் வந்துகொண்டிருக்கின்றனவென்று சிகாகோவிலிருந்து ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. இக்காளைகள், அதிக பால் கொடுக்கும் 'ஹோல்ஸ்டீன்' இனத்தைச் சேர்ந்தனவாம். புதுமுறையில் நடைபெறும் ஆர்லிங்டன் பால் பண்ணையில் வளர்க்கப்பட்ட எருதுகள்!



# எப்பொழுதும் ஏதாவது ஒரு ஜந்துவுடன் விளையாடுவான்!





## —அவன் 'அழுக்கு அபாய'த்திலிருந்து காப்பாற்றப் படுவதற்கு நீங்கள் நன்றி யுள்ளவர்களாய் இருக்கவில்லையா?

அவன் ஏதாவது ஒருவகை பிரியமான ஜந்துவுடன் விளையாடுவான். பையனுக்கு பிராணி என்றால் பிரியம். அந்த ஜந்துவானது புழுதியில புரண்டாலும் அதனிடம் அவனுககுள்ள அன்பு குறைவதில்லை. அவனுக்கு லைப்பாய் பழக்கம் ஏற்பட்டிருப்பது ஒரு கடாக்ஷம் என்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் எவ்வளவு அழுக்கு அவன் மேல் படிந்திருக்கும்.

'அழுக்கு அபாய'த்தினின்றும் லைப்பாய் காப்பாற்று விட்டால் அநேகம் தாய்மார்கள் துக்கத்திற்கு ஆளாவார்கள். அழுக்கில் குழந்தைகளுக்கு நோய் உண்டாக்கக் கூடிய கிருமிகள் இருக்கின்றன வென்றும், அவை எப்படி நோயைப் பரவச்செய்யும் என்றும் எல்லோருக்கும் தெரியும், ஆனால் குழந்தைகள் ஒழுங்காக லைப்பாய் சோப் தேய்த்துக் குளித்தால், வியாகூலப்பட வேண்டிய அவசியமே இல்லை. லைப்பாய் விஷக்கிருமி நாசக சோப். அதில் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க வல்ல ஓர் அபூர்வத் தன்மை இருக்கிறது. அதுதான் அது உலகப் பிரசித்தி பெற்றதற்குக் காரணம். இந்தியாவில் மற்ற எந்த சோப்புக்கும் இந்த பாதுகாக்கும் குணமில்லை.





## லைப்பாய் நல்ல ஸோப்பைக் காட்டிலும் சிறந்தது அதுஒருநல்லவழக்கம்

இப்பொழுது மெழுகுத் தாளினால் சுற்றி விற்கப்படுகிறது

L. 49-50 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED




மற்றொரு இந்திய ஞாபகார்த்த சிலை

# மைசூர் சந்தன சோப்

குணத்திலும், மணத்திலும், மேம்பாட்டிலும் நிகரற்றது

எங்கும் கிடைக்கும்:

கவர்ன்மென்ட் சோப் பாக்டரி, பெங்களூர்